விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 தை 13 திங்கட்கிழமை (26.01.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 038








# 13 வருடங்களுக்குப் பின்னர் முல்லைத்தீவு படையினர் வசம்

## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த முல்லைத்தீவு நகரப்பகுதியை 13 வருடங்களின் பின்னர் படையினர் கைப் பற்றியுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)




## சிங்கள அரசின் போருக்கு கருணாநிதியும் பங்காளி

(திருநெல்வேலி)

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக சிங்கள அரசு நடத்தும் போருக்கு கருணாநிதியும் ஒரு பங்காளிதான் என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கூறினார்.

திருநெல்வேலியில் நேற்று நடந்த ம.தி. மு.கவின் நகர் செயலாளர் நிஜாம் இல்லத் திருமண விழாவில் பங்கேற்ற வைகோ நிருபர்களிடம் கூறியதாவது,

இலங்கையில் சிங்கள இராணுவத்திற்கு ஆயுதங்கள், நிதி கொடுத்து இந்திய நிபுணர்களை அனுப்பி வைத்து கடந்த 4 ஆண்டுகளாக மத்திய அரசு உதவி வருகிறது.

தற்போது (12ஆம் பக்கம் பார்க்க)

# மோதல்கள் குறுகிக் கொண்டு வருவதால் உயிரிழப்புக்கள் அதிகரிக்கும் சாத்தியம்

## பிரி.உயர்ஸ்தானிகர் கவலை

(கொழும்பு)

வன்னியில் மோதல் இடம்பெற்றுவரும் பகுதி குறுகிக் கொண்டே வருகின்ற நிலையில் பொதுமக்களின் உயிரிழப்புக்கள் அதிகரிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாக இலங்கைக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகர் கலாநிதி பீட்டர் ஹெய்ஸ் கவலை வெளியிட்டுள்ளார்.

மட்டக்களப்பு,அம்பாறை மாவட்டங்களுக்கான விஜயத்தின் பின்பு ஊடகவியலாளர்களுக்கு கருத்து வெளியிட்ட போதே இவ்வாறு அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

அனைத்து வழிகளிலும் மோதலில் ஈடுபட்டுள்ள விடுதலைப் புலிகள் மற்றும் இலங்கை அரசாங்கம் ஆகிய இரு தரப்பும் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு தொடர்ந்து அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றோம்.

அங்குள்ள மக்களுக்கு மனிதாபிமான நிவாரண உதவிகளை அளிப்பது கடினமானதாக இருப்பினும் அதில் சிறிதளவு வெற்றி பெற்றுள்ளோம்.

அங்குள்ள நிலைமையைப் பொறுத்த வரை கவலையில் (02ஆம் பக்கம் பார்க்க)

## அதி நவீனமான 160 டாங்கிகள் சீனாவிடமிருந்து அரசு கொள்வனவு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிக் கட்ட யுத்தம் என அரசாங்கம் தெரிவித்து முல்லைத்தீவை நோக்கிய நகர்விற்கு சீனா மற்றும் பாகிஸ்தான் நாடுகளிடம் இருந்து நவீன கனரக ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதில் ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகிறது.

முல்லைத்தீவை நோக்கிய நகர்வில் எதிர்பாராத விளைவுகளை சந்திக்க நேரிடும் எனக் கருதி முதல் கட்டமாக இலங்கை அரசு சீனாவிடமிருந்து நவீன 160 டாங்கிகள் மற்றும் கனரக ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதில் ஈடுபட்டுள்ளது.

படையினரின் முன்னோக்கிய நகர்வில் மழை,வெள்ளம், சகதி மற்றும் காடு சார்ந்த சூழலை எதிர்கொள்ளக் கூடிய அதி நவீன டாங்கிகள் சீனாவில் இருந்து அனுப்பி வைக் கப்பட்டுள் (12ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை விரைவில் பூர்த்தியாகும்

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

முப்படைகளின் தளபதியும் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையின் காரணமாகவே படையினர் பல வெற்றிகளை பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது.

பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் படையினர் 95 வீதம் வெற்றி கண்டுள்ளனர்.

மிகுதியையும் மிக விரைவில் வெற்றி கொள்வோம் என்று இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தார்.படையினர் முல்லைத்தீவு (12ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ வெற்றிகளின் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு வராது

## இரா.சம்பந்தன் பி.பி.சிக்குப் பேட்டி

(கொழும்பு)

இராணுவ வெற்றிகளின் மூலம் இனப் பிரச்சினைக்கு தீர்வு எதுவும் ஏற்படப் போவதில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

இது விடயம் சம்பந்தமாக எனக்கு நேரான தகவல் ஒன்றும் இல்லை. ஆனால் இந்த இராணுவ வெற்றிகளை நான் வெறும் வெற்றியாகத்தான் பார்க்கிறேன்.

அதாவது இந்த இராணுவ வெற்றியின் மூலமாக இலங்கையில் நாடு சுதந்திரம் அடைந்த நாள் தொடக்கம் நிலவி வந்திருக்கும் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு ஒரு முடிவு வரலாம் என்று எல்லோரும் எதிர்பார்க்கின்றார்கள் என்றால் அவர்கள் தங்களையே ஏமாற்றிக் கொள்கிறார்கள் என்பது தான் என்னுடைய கருத்து.

ஏனெனில் இந்தப் பிரச்சினையை இராணுவ ரீதியாக (02ஆம் பக்கம் பார்க்க)

## றோவின் தலைவராக கே.சி.வர்மா நியமனம்

(புதுடில்லி)

இந்திய உள்நாட்டு பாதுகாப்பு ஆலோசகர் கே.சி.வர்மா புலனாய்வுத் அமைப்பான றோவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது றோவின் தலைவராக உள்ள அசோக் சதுர்வேதியின் பதவிக்காலம் ஜனவரி 31இல் முடிபடைகிறது.

அதன் பின்னர் வர்மா அப்பொறுப்பை ஏற்றுக் கொள்வார் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மூழ்கிய டோராவில் இருந்த 19 கடற்படையினரை காணவில்லை

## லக்பிம தெரிவிப்பு

முல்லைத்தீவு கடற்பகுதியில் கடந்த திங்கட்கிழமை மூழ்கடிக்கப்பட்ட டோரா படகில் இருந்த 19 கடற்படையினரின் சடலங்கள் நேற்றுவரை மீட்கப்படவில்லை என லக்பிம வார ஏடு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முல்லைத்தீவு கடற்பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரவு டோரா அதிவேக தாக்குதல் படகுகள் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன.

இந்த அணியில் இருந்த பி-434 இலக்கமுடைய டோரா படகினை அதன் கட்டளை அதிகாரி ஸ்குவாட்றன் லெப்டினன்ட் கொமாண்டர் என்.எல்.அபயசிங்க பரிசோதித்து கொண்டிருந்த சமயம் இரவு 11.30 மணியளவில் பாரிய வெடியோசை எழுந்ததுடன் ஒரு நிமிடத்தில் டோரா படகு கடலில் மூழ்கிவிட்டது.

இதனைத் தொடர்ந்து எத்தனை கடற்புலிகளின் படகுகள் கடலிலுள் ஊடுருவி உள்ளன என்பது தொடர்பாக சரியாக அறிய முடியாததால் கடற்படையினர் தமது டோரா படகுகளை நடுக்கடலை நோக்கி நகர்த்தியிருந்தனர்.

தாக்குதலின் பின்னர் நடைபெற்ற தேடுதலில் ஒரு கடற்படை சிப்பாய் காப்பாற்றப் பட்டுள்ளார். 3 அதிகாரிகளும் 16 கடற்படையினரும் காணாமல் போயுள்ளனர்.

கடற்படையினர், இரு விடுதலைப் புலிகளின் உடலங்களை மீட்டுள்ள போதும் படகு எவ்வாறு மூழ்கியது என்பது தொடர்பாக கடற்படை வட்டாரங்களில் பேரதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

எனினும் வெடிமருந்து நிரப்பப்பட்ட கடற்புலிகளின் படகு டோராவுக்கு அருகாமையில் வெடித்திருக்கலாம் என்று கடற்படையினர் நம்புகின்றனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

# உயர்தர வகுப்புக்களை உடைய பாடசாலைகளின் அதிபர்களுக்கு ஊடக பயிற்சி மையத்தில் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தினால், க.பொ.த உயர்தர வகுப்புக்களை உடைய பாடசாலை அதிபர்களுக்கான கருத்தரங்கொன்று நாளை மறுதினம் 28 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு இடம் பெறவுள்ளது.

"ஊடகக் கல்வி அறிவும் பாடசாலை மாணவர்களும்" என்ற கருப்பொருளில் இலக்கம் 84, ஜும்மா பள்ளி ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் அதன் பணிப்பாளர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் இக் கருத்தரங்கு இடம்பெறும்.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாண மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் மற்றும் வலயக்கல்விப் பணிப்பாளர்கள் சிறப்பு விருந்தினர் களாகவும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் தொடக்க உரையை கலைப் பீடாதிபதி பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா நிகழ்த்துவார். யாழ்ப்பாணக் குடாநாட்டு மாணவர்களிடையே ஊடகக் கல்வியை அறிமுகப்படுத்தும் இக்கருத்தரங்கில் அழைக்கப்பட்ட பாடசாலை அதிபர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கேட்டுள்ளார். (ச-3)

# இராணுவ வெற்றிகளின்...

தீர்க்கப்பட முடியாது. இந்தப் பிரச்சினை அரசியல் ரீதியாக மட்டுமே தீர்க்கப்பட வேண்டும். வேறு விதத்தில் எவராலும் இந்தப் பிரச்சினையை இராணுவ ரீதியாக தீர்க்க முடியாது.

நாடு வெற்றி பெறுவதாக இருந்தால் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய நியாயமான உறுதியான நிதானமான தீர்வு ஏற்படவேண்டும். ஏற்படாவிட்டால் எல்லோருக்கும் தோல்வி.

இறுதியில் எல்லோரும் தோல்வி அடைவார்கள். அது தான் உண்மை. ஆனபடியால் இவ்விதமான அறிவித்தல்கள் மூலம் இலங்கைக்கு ஏதேனும் லாபம் கிடைக்குமென்று நான் துப்புரவாக நினைக்கவில்லை.

பௌத்த சிங்கள வாதத்தை நாடு முழுவதும் பரப்புவதற்கு தங்களுக்கு ஒரு இராணுவ வெற்றி அத்தியாவசியம்.

இராணுவ வெற்றியின் மூலமாகத்தான் அதைத் தாங்கள் அடையலாம் என அரசு நினைக்கின்றது.

அதுதான் அவர்களுடைய கொள்கை. அவர்களுடைய செயற்பாட்டினுடைய அடிப்படைக் காரணம். சர்வ·கட்சிக்குழுவின் நடவடிக்கையில் எமக்கு எள்ளளவும் நம்பிக்கையில்லை.

அதன் மூலமாகத் தான் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணலாம் என்று ஒரு போதும் எண்ணவில்லை. சர்வகட்சிக் குழுவில் நாங்கள் பங்கு பற்றவில்லை.

பங்கு பற்றும் படி எமக்கு அழைப்பு வரவும் இல்லை. அது ஒரு பிரயோசனமான ஒரு நடவடிக்கையாக நாங்கள் கருதவும் இல்லை.

உதவாத ஒரு நடவடிக்கையாகத்தான் நாங் கள் கருதுகிறோம் என்றார். (ச-3)


## SUBRA (14)

தரம் 5 - 2009

வட்டுக்கோட்டை கைலைநாதன்

புதிய பிரிவு II ஆரம்பம்

சித்தன் கேணி சசிதரன்

புதிய பிரிவு III ஆரம்பம்

- ★ ஒரு பிரிவில் -(40) மாணவர்கள் மட்டும் 2008ல் – 28 மாணவர் சித்தி
- ★ வாரம் தோறும் 29ஆம் திகதிக்கு முன் அனுமதி பெறவும் — வெற்றித் தேர்வு Bond புண்ணியாமின்
- ★ இலவச சிங்கள வகுப்பு
- ★ இலவச கணனி வகுப்பு

01.02.2009 முதல் பரீட்சைப் புள்ளிகள் வாரம் தோறும் வலம்புரியில்

தரம் 01 முதல் 03 வரை சிறப்பான ஆசிரியர் குழுவின் வழிகாட்டல் வகுப்புக்கள்

வெகுவிரைவில் விசேட வகுப்பு மின்னொளியில் அனுமதிகள் வழங்கப்படுகின்றது –சிறப்புப் பிரிவு தினமும் மாலை 6–7 வரை

(C-2062)


# மோதல்கள் குறுகிக் கொண்டு வருவதால்...

ஆழ்த்தும் விடயமொன்றும் இருக்கி ன்றது.

அதாவது மோதல் நடைபெறும் பகுதி குறுகிக் கொண்டே வருகின்ற நிலையில் பொதுமக்களின் உயிரிழப்புக்களுக்கான சாத்தியக்கூறுகள் அதிகரிக்கக் கூடும் என்பதே அந்த கவலையாகும்.

இந்நிலையில் அப்படியான உயிரிழப் புக்கள் அதிகரிப்பதை தடுக்கும் பொருட்டு சகல தரப்பினரையும் ஊக்குவிக்கும் வகையில் முயற்சிகளை இரட்டிப்பாக்க வேண்டிய நிலை தற்போது உருவாக்கியுள்ளது என்று வன்னி மோதல் நிலைமை குறித்து தனது கருத்தை வெளியிட்டார்.

அவர் கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைவரம் தொடர்பாக கூறுகையில் ;

இலங்கையின் எதிர்காலத்துக்கு மிக முக்கியமான மாகாணமெனக் கருதப்படும் இம் மாகாணத்தில் அமைதியையும் பாதுகாப் பையும் ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையைத் தரும் சகல நடவடிக்கைகளுக்கும் பிரித்தானியா ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கும்.

இங்கு தங்கியிருந்த நாட்களில் பல்வேறு தரப்பினரையும் சந்தித்த போது அவர்கள் இன்னமும் பல சவால்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருப்பது எனக்கு ஆச்சரியம் தந்தது.

கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரை இடம் பெயர்ந்துள்ள மக்களின் மீள் குடி யேற்றம் முன்னேற்றகரமாகவுள்ளது. யுத்தத்திலிருந்து இம்மாகாணம் தற்போது விலகியுள்ளதால் அதிக முன்னேற்றம் இங்கு ஏற்பட்டுள்ளது. எனினும் இவையெல்லாம் எந்நேரத்திலும் பாதிக்கப்படும் சூழ்நிலையும் உள்ளது.

பொதுமக்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை காணப்படுவதாக தெரிகின்றது. பொருளாதார ரீதியில் முன்னேற்றத்தை நோக்கி சென்று கொண்டிருந்தாலும் மக்கள் தாங்கள் பாதுகாப்பான நிலையில் இல்லை என உணரும் போது அந்த முன்னேற் றங்கள் அர்த்தமற்றதாகி விடும்.

இம் மாகாணத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு தன்னார்வ தொண்டர் அமைப்புகளும் ஐ.நா அமைப்புகளும் மக்களுக்கு பல்வேறு வழிகளில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

ஆனால் அரச சார்பற்ற அமைப்புக்களை சிலர் விமர்சிப்பது கவலையளிக்கின்றது. பல உள் நோக்குடனே சர்வதேச சமூகம் இங்கு பணியாற்றுகின்றது என சிலர் சந்தேகிக் கின்றனர். இம் மாகாண மக்கள் நன்மைக்காக சர்வதேச அமைப்புக்களால் எவ்வளவோ நிதி செலவு செய்யப் பட்டுள்ளது என்பதை வீதிகளில் செல்லும் போதும் சமூகத்திலும் பார்த்தால் தெரியும் எனத் தெரிவித்தார். (ச-5)


## பணியாட்கள் தேவை

லொறி டீசல் மெக்கானிக், வெல்டிங் ஒட்டுநர், கூலியாட்கள் தேவை.

கண்டாவளை மண் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு:- சிவலிங்கம் மோட்டோஸ், 77, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம்.

(2149)


# கருணாவுக்கு அமைச்சர் பதவி

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா), தேச நிர்மாண அமைச்சராக நியமிக் கப்படவுள்ளார் என தகவல்கள் வெளியாகி யுள்ளன.

கிழக்கிற்கான அபிவிருத்தியை கருத்தில் கொண்டு கருணா, தேச நிர்மாண அமைச் சராக நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஏற்கனவே இலங்கையில் ஐந்து தேச நிர்மாண அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள் ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (ச-5)

# மரண அறிவித்தல்

## செல்லையா கந்தசாமி

(கந்தரத்தினம் மாஸ்ரர், இளைப்பாறிய ஆசிரியர்)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கந்தசாமி (25.01.2009) ஞாயிற்றுக்கிழமை மாலை இந்தியாவில் காலமானார்.

அன்னார் பத்தினிப்பிள்ளையின் அன்புக் கணவரும் செல்வேஸ்வரன் (இந்தியா), இரத்தினேஸ்வரன் (கனடா), செல்வேஸ்வரி (இந்தியா), ஞானேஸ்வரன் (லண்டன்), யோகேஸ்வரன் (கனடா), கேதீஸ்வரன் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும். பத்மினி (இந்தியா), கௌரிஅம்பிகை (கனடா), இராசநாயகம் (இந்தியா), ராஜி (லண்டன்), சிவாஜினி (கனடா), வானதி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும். கார்த்திகா, கோபிநாத், லக்சுமி, அன்பழகன், பிரகலாதன், அருணுத், சிந்துஜா, சிவயா, வாகீசன், உமாசங்கர் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற தங்கரத்தினம் மற்றும் செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 26.01.2009 திங்கட்கிழமை இந்தியாவில் இடம்பெறும்

இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

MRS. P.KANDASAMY,
1010 NANDANAM APARTMANT,
3RD FLOOR ASPIRAN GARDEN,
1ST STREET, KILPAUK,
CHENNAI - 10
T.P.0091 4426460694

தகவல்:
க.ஜெயதாஸ்
(கந்தமுத்து மோகன் பெறாமகன்)
செ.கஜானந்தன் (மருமகன்)
வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை.

(c-2075)


## கலாலயா

பயிற்சியகம்

( பெருமாள் கோயிலுக்கு அண்மையில் )



◆ மகளிருக்கான 3மாத கால

கேக் ஐஸிங், Sugar Flowers, உணவுகள் தயாரித்தல், கூந்தல் அலங்காரங்கள் (50 வகை), பப்றிக் Painting, கைவேலை பூவேலை, Saree works.

- ◆ 6 மாத கால அடிப்படை தையல் பயிற்சிகள்
- ◆ இருவார கால சாறிபிளவ்ஸ், சுரிதார் தைத்தல்.
- ◆ 12 நாள் Facials, மணப்பெண் அலங்காரங்கள், Manicure Pedicure, முடிவெட்டுதல், சுருட்டுதல், அயன் செய்தல் மற்றும் பல. (இப்பயிற்சி மட்டும் அடுத்த மாத நடுப்பகுதியில் ஆரம்பமாகும்.)

சனி, ஞாயிறு பிரிவுகளிலும் கிழமை நாள் பிரிவுகளிலும் புதிய மாணவிகளுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

☞ மேலும் விபரங்களை தினமும் பி.ப. 2.00 மணிவரை நேரில் அறிந்துகொள்ளலாம்.

(c-2074)

# இன்று ஒரு தகவல்

## இரும்பு மனிதர்

ஒரு நீதிமன்றத்தில் ஒரு கொலைவழக்கு சம்பந்தமான விசாரணை நடந்து கொண்டிருந்தது. வழக்கறிஞர் ஒருவர் மிகவும் தீவிரமாக வாதாடிக் கொண்டிருந்தார்.

தன்னுடைய கட்சிக்காரர் நிரபராதி என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். அதனால் தான் அவர் சார்பாக வதா டுவதற்கே ஒத்துக் கொண்டார்.

அப்படி மும்முரமாக வாதாடிக் கொண்டிருக்கும் போது, அவருக்கு அவசரமாக ஒரு தந்தி வந்தது. அதை வாங்கிப் படித்துப் பார்த்தார். அதற்குப் பின் அதை மடித்து தன் னுடைய பையில் வைத்துவிட்டு தொடர்ந்து வாதாட ஆரம்பித்தார். பேசி முடித்தார்.

அதன் பின்னர் அங்கிருந்த சில வக்கீல்கள் அவரிடம் வந்தார்கள்.

“ தந்தி வந்ததே... என்னவிஷயம்? என்று விசாரித்தார்கள். அதற்கு அவர் ஊரில் சிகிச்சைக்காகப் போயிருந்த என் மனைவி இறந்து போனதாக தந்தி வந்திருக்கிறது ” என்றார்.

மற்ற வக்கீல்களுக்கு அதிர்ச்சி!

“ என்ன இது... மனைவி இறந்ததை விட இது முக்கியமா?” என்று கேட்டார்கள்.

“ இறந்து போன என் மனைவி மறுபடியும் திரும்பி வரப் போவதில்லை...ஆனால், என் கட்சிக்காரர் ஒரு கொலை வழக்கில் மாட்டிக் கொண்டார். அவரோ நிரபராதி .அவர் உயிரை நான் காப்பாற்ற வேண்டாமா? இது தான் என் கடமை!” என்றார்.

இப்படி இவர் சொன்னதும் எல்லோரும் அப்படியே திகைத்துப் போய் நின்றார்களாம்.

கடமைக்கு முக்கியத்துவம் கொடுத்த அந்த வழக்கறிஞர் யார் தெரியுமா?

அவர் தான் இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய் படேல். குஜராத்தில் 1875 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி ஜாவேரிபாய் என்பவருக்கு நான்காவது பிள்ளை யாக பிறந்தார்.

ஜாவேரிபாய், ஜான்சிராணி லட்சுமிபாயின் போர்ப் படை யில் வீரராகப் பணி புரிந்தவர்.

இளம்வயதில்வல்லபாய் படேல் மிகவும் சிரமப்பட்டுப் படித்தார். விடாமுயற்சி வெற்றியைக் கொடுத்தது. கல்லூரியில் படித்து வக்கீல் பட்டம்பெற்றார்.

பிரிட்டிஷ் ஆட்சியின் போது குஜராத்தில் விவசாயிகள் மீது அரசாங்கம் திடீரென நில வரியை உயர்த்தியது.

ஏழைவிவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். அரசாங்கத்தை எதிர்ப்பவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். சிலர் வீடுவாசல் , ஆடு மாடு என்பவற்றைக் கூட விற்று வரிகட்டினார்கள்.

வழக்கறிஞர் வல்லபாய் படேல் நிலவரியை உடனடியாக இரத்துச் செய்யக் கோரி பம்பாய் கவர்னருக்கு கடிதம் எழுதினார். எந்தப் பலனும் இல்லை.

உடனடியாக எல்லா விவசாயிகளையும் அணிதிரட்டி தானே முன்னின்று சத்தியாக்கிரகம் நடத்தினார்.

அந்தப் பகுதியில் எந்த வேலையும் நடைபெறவில்லை. வேறு வழியில்லாமல் ஆட்சியாளர்கள் உடனே வரியை இரத்துச் செய்து சிறையிலிருந்தவர்களை எல்லாம் விடுதலை செய்தனர்.

1928 ஆகஸ்ட்6ஆம்திகதி சர்க்காருக்கும் விவசாயிகளுக்கும் உடன்பாடு ஏற்பட்டு நிலைமை சரியானது.

வல்லபாய் படேலின் பொதுச் சேவையைப் பாராட்டிய பொது மக்கள்அவருக்கு ‘‘சர்தார்’’ என்ற பட்டத்தை அளித்து கௌரவித்தனர்.

சர்தார் என்றால் தலைவர் அல்லது தளபதி என்று அர்த்தம்.

இரும்பு மனிதர் என்று பெயரெடுத்த இவரிடம் நகைச் சுவை உணர்வும் நிறையவே இருந்தது.

ஒரு தடவை ஒரு பத்திரிகை நிருபர் சர்தார் படேலிடம், அவருக்கு பிடித்த பண்பாடு, கலாசாரம் எது வென்று கேட்க ஆசைப்பட்டார்.

அவரைப் பார்த்து, “ உங்களுக்குப் பிடித்த கல்ச் சர் (Culture) எது ?”என்று கேட்டிருக்கிறார்.

அதற்கு அவர்“ எனக்குப் பிடித்த கல்ச்சர் அக்றி கல்ச்சர் ” என்றாராம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தேசிய ஆசிரியர் இடமாற்ற கொள்கைக்கு மாறாகவே ஆசிரிய இடமாற்றங்கள்

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

தேசிய ஆசிரிய இடமாற்றுக் கொள்கைக்கு மாறாக ஆசிரிய இடமாற்றங்கள் மேற்கொள்ளப் படுவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

2007 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைய தேசிய ஆசிரிய இடமாற்றக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்ரான்லி தெரிவித்தார்.

இந்தக் கொள்கைக்கு அமைய வலயக்கல்விப் பணிமனைகளில் ஆசிரிய இடமாற்றக்குழுக்களை அமைத்து அதனூடாக இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர் சுட்டிக் காட்டினார்.

எவ்வாறாயினும் நாட்டின் அனேகமான வலயக் கல்விப் பணிமனைகளில் இந்த ஆசிரிய இடமாற்றக் குழுக்கள் அமைக்கப் படாத நிலையிலேயே இடமாற்றங்கள்மேற் கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார்.

தேசிய ஆசிரிய இடமாற்றக் கொள்கை நடைமுறைப்படுத்தப் படாமையால் சில ஆசிரியர்கள் நீதி மன்றத்துணையை நாடவேண்டிய நிலை ஏற்பட்டதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தலைவர் குறிப்பிட்டார்.

இதனால் தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கையை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இது தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளர் நிமல் பண்டாரவிடம் வினவிய போது இவ்வாறான கருத்துக்களை தெரிவிக்கும் போது ஆசிரியர் தொழிற்சங்கங்கள் ஏனைய தொழிற்சங்கங்களை விட பொறுப்புடன் சரியான தகவல்களை மக்களுக்கு வழங்க வேண்டும் என கூறினார்.

மத்திய அமைச்சின் கீழ் இயங்கும்326பாடசாலைகளிலும்ஆசிரியர் தொழிற்சங்கங்களுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப் பாட்டின் பிரகாரம் ஆசிரியர் இட மாற்றக் குழுக்களின் ஊடாகவே இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (6-4-2)

# கிளி,முல்லை அரச அதிபர்கள் வெளியேற்றம்; 4 இலட்சம் மக்கள் உதவிகளின்றி நிர்க்கதி

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் அரசாங்க அதிபர்கள் வன்னியிலிருந்து வெளியேறியிருப்பதுடன்சிவில் நிர்வாகப் பணிகளையும் இடைநிறுத்தியுள்ளனர். இதனால் முல்லைத்தீவு மாவட்டத்தில் தங்கியுள்ள சுமார் 4 இலட்சம் பொது மக்கள் நிவாரண உதவிகள் எதுவுமின்றி பரிதவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி,முல்லைத்தீவு நகரங்களிலிருந்து வெளியேறி தற்காலிகமாக புதுக்குடியிருப்பில் செயற்பட்டுவந்த தமது அரசாங்க அதிபர் காரியாலயங்களை மூடியுள்ள அவர்கள் அரசாங்க உத்தியோகத்தர்களையும் அங்கிருந்து வெளியேறுமாறு பணித்துள்ளனர்.

முல்லைதீவு மாவட்டத்தில்உள்ள பொது மக்கள் அங்கிருந்து வெளியேறுவதற்கு ஏதுவாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் கருதி அரசாங்க உத்தியோகத்தர்கள் அனைவரும் பணிகளை இடைநிறுத்தி விட்டுஅங்கிருந்து வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டிருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இரண்டுதரப்புக்களுக்கு மிடையே மோதல்கள் தீவிரம டைந்து கடுமையான எறிகணை வீச்சுக் களும் ஆரம்பித்துள்ள நிலையில் வெள்ளிக்கிழமை இரவு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது.

புதுக்குடியிருப்பில் தற்காலிகமாக இயங்கிவந்த கிளிநொச்சி அரசாங்க அதிபர் செயலகம் ஏற்கனவே மூடப்பட்டு விட்டதாக தற்போது அங்கிருந்து வெளியேறி விட்ட கிளிநொச்சி அரசாங்க அதிபர் என்.வேதநாயகம் தெரிவித்தார்.

இலங்கை மோதல் வரலாற்றில் முதற் தடவையாக இவ்வாறு அரசாங்க அதிபர் காரியாலயங்கள் மூடப்பட்டு பணிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழிருந்த மன்னார் , வவுனியா ,யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின்சில பகுதிகளிலிருந்தும் முல்லைத்தீவு மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளிலிருந்தும் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்தும் முழுமையாகவும் இடம் பெயர்ந்துள்ள சுமார் 4 இலட்சம் பொது மக்கள் தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகவும் குறுகிய பிரதேசத்துக்குள் செறிவாக வாழ்ந்து வருகின்றனர்.

முற்றாக நிவாரண உதவிகளில் தங்கியுள்ள இவர்களுக்கு வேண்டிய உதவிப் பணிகள் அரசாங்க அதிபர்காரியாலயங்களுக் கூடாகவே வழங்கப்பட்டு வந்தது.

தற்போது அரசாங்க அதிபர் காரியாலயங்கள் மூடப்பட்டுபணிகள் இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருப்பதால் இங்கு வாழும் 4இலட்சம் மக்களும் உதவிகள் ஏதுவு மின்றிப் பரிதவிக்கும் நிலை ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் முல்லைத்தீவு மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் தமது பணிகள் தொடரும் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

புதுக்குடியிருப்பு வைத்திய சாலையில் சுமார் 300 நோயாளர்கள் தங்கியிருப் பதாக தெரிவித்துள்ள செஞ்சிலுவைச் சங்கம் நோயாளர்களும் காயமடைந்தவர்களும் இருக்கம் வரையில் தாம் தொடர்ந்து அங்கே இருக்கப் போவதாகக் கூறியுள்ளது.

இதே வேளை உணவு விநியோகப் பணிகளை மேற் கொள்வதற்காக புதுக்குடியிருப்பில் செயற்பட்டு வந்த ஐ.நா அலுலவ கம் தற்போது அரசாங்கம் அறிவித் துள்ள யுத்த சூனியப் பிரதேசமான உடையார் கட்டுக்கு மாற்றப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (6)

## இராசி பலன்

*26.01.2009*
*(தை13, திங்கட்கிழமை)*
*உத்தராடம் முற்பகல் 9.12மணிவரை*
*அமவாசை பிற்பகல்2.05மணிவரை*
*இராகுகாலம் 8.06-9.36 மணிவரை*
*சுபநேரம் 12.36-2.06 மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | அதிக பிரயாசை, அதிகாரம், போசனசுகம், தெய்வசிந்தை. |
| இடபம் | புதியமுயற்சி, சரீரப்பிரயாசை, பிதாசிந்தை, கட்டுப்பாடு. |
| மிதுனம் | காரிய தடங்கல், போசன சுகம், எதிர்பாராத பிரச்சினை, வாகன பயம். |
| கடகம் | ஆரோக்கியம், காரிய நன்மை, செல்வாக்கு,தெய்வசிந்தை. |
| சிங்கம் | உற்சாகம்,பெரியோர்உதவி,எடுத்த காரியம் கைகூடும , தொழில் விருத்தி. |
| கன்னி | வேலைச் சுமை, முயற்சி தாமதம், போசன சுகக்குறைவு, அமைதிக் குறைவு. |
| துலாம் | முயற்சி தாமதம், சுபசெலவு,மனச்சஞ்சலம்,உடல் நலக் குறைவு. |
| விருச்சிகம் | உறவினர் உதவி,போசன சுகம், விருந்துபசாரம், காரிய அனுகூலம். |
| தனுசு | காரியதாமதம், பண விரயம், உணர்ச்சிவசப்படல், போசன சுகக் குறைவு. |
| மகரம் | கற்பனைமிகுதி, நல்ல முயற்சி, நண்பர்கள்உதவி, போசனசுகம். |
| கும்பம் | காரிய தாமதம், பிரயாணம், பண விரயம், சகோதரர்உதவி. |
| மீனம் | காரிய அனுகூலம் ,பெருமையடைதல்,போசன சுகம்,எதிர்பாராத நன்மை. |

வளவன்

# பொலிஸில் சரணடைந்த ஆறு இளைஞர்கள் விடுதலை

(வவுனியா)

பொலிஸாரிடம் சரணடைந்த ஆறு இளைஞர்கள் வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். நீதி மன்றத்தின் கட்டளைப்படி இந்த ஆறு பேரும் வவுனியா பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டு அவர்கள் குடும்பத்தாருடன் சேர்ந்து வாழ ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

மகாலிங்கம் நிசாந்தன் , சாள்ஸ் ப ணி ஸ் கி ன் ஸ் லி அ லெ க் ஸ் ஜெனட்,மாணிக்கம் சோதீஸ்வரன், செல்வராசா செந்தூரன், அன்னராசா ஜெயராசா, வசந்தகுமார் மதன்ஆகியஆறு பேருமே விடுவிக்கப்பட்டவர்கள்ஆவர்.

வன்னிப் பகுதியைச் சேர்ந்த இவர்களை உடனடியாகவே வன்னிக்கு அனுப்பவசதிகளில்லாத படியால்நெலுக்குளம்பகுதியிலுள்ள இடைத் தங்கல் முகாமில் (வியாழக்கிழமை)தங்கவைக்கப்பட்டுள்ளனர். எனத் தெரியவருகின்றது. 6

## இல்ல மெய்வன்மைப் போட்டி

(சாவகச்சேரி)

கொடிகாமம் திருநாவுக்கரவு மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அதிபர் வ.நடராசா தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன், சிறப்பு விருந்தினராக கோட்டக் கல்வி அதிகாரி ந.சத்தியநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-4-29)

## நியமனம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபையின் குருவானவராக கடந்த 10 வருடங்களாக சேவையாற்றிய வணபிதா ரி.எச்.வசந்தகுமார் இணுவில் திருச்சபையுடன் அச்சுவேலி, தென்மராட்சி,வடமராட்சி ஆகிய பிரதேசங்களுக்கு பிராந்தியக் குருவாக நியமிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபையின் சேவைக்கு வரணி திருச்சபை குருவான கே.டபிள்யூ ரி.தேவசகாயம் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-4-29)

## யோகாசன வகுப்புகள்

(சாவகச்சேரி)

மட்டுவில் தெற்கு ஸ்ரீசிவகுருநாத குருபீட வேதாந்த மடத்தில் எதிர்வரும் பெப்ரவரி 2 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு புதிய யோகாசன வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதில் ஆண்கள் ,பெண்கள்,சிறியோர், பெரியோர் என்ற வித்தியாசமின்றி கலந்து கொள்ளலாமென்றும் விரும்புவோர் அன்றைய தினம் வருகை தந்து பதிவுகளை மேற்கொண்டு பயிற்சிகளில் பங்குகொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6,4-29)

## பங்கீட்டு அட்டையை மாற்ற கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவிலிருந்து வலி கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் இடம்பெயர்ந்த மக்கள் பங்கீட்டு அட்டையை தெல்லிப்பளைக் கிளைக்கு மாற்றுவதற்கு கிராமசேவகரிடம் கொண்டு போய் பதிவு செய்து கொள்ளுமாறும் இல்லாவிடின் நிவாரணம் வழங்கப்படமாட்டாது எனவும் இடம்பெயர்ந்த நிவாரணசங்க உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (6)

## நிஷா அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி

(நல்லூர்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள நிஷா வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க நல்லூர் பிரிவினால் நேற்று உணவில்லாத பண்டங்கள் வழங்கப்பட்டன.

இதில் நந்தாவில், கொக்குவில், தலையாளி ஆகிய பகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 50 குடும்பங்கள் பயன்பெற்றன. (6,4-134)

## ப.நோ.கூ.சங்கங்கள் ஊடாக
# இன்று முதல் உருளைக்கிழங்கு விநியோகம்

யாழ்.மாவட்டத்திற்கு றுகுணு கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட உருளைக்கிழங்கு மாவட்டத்திலுள்ள 24 ப.நோ.கூ.சங்கங்கள் ஊடாகவும் இன்று முதல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் எடுத்துவரப்பட்டுள்ள உருளைக்கிழங்கு மக்கள் தொகைக்கேற்ப ப.நோ.கூ.சங்கங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.ஒரு கிலோ உருளைக்கிழங்கின் ப.நோ. கூ.சங்கங்களின் விற்பனை விலை 65 ரூபா என விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

1,2 அங்கத்தவர் உடைய குடும்பங்களுக்கு 250கிராம் உருளைக்கிழங்கும் 3,4 அங்கத்தவருடைய குடும்பங்களுக்கு 500 கிராம் உருளைக்கிழங்கும் 5ம் அதற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு 750 கிராம் உருளைக் கிழங்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி விநியோகம் சீராக நடைபெறுவதனை உரிய அலுவலர்களை நியமித்து மேற்பார்வை செய்யுமாறு பிரதேச செயலர்கள்/ உதவி அரசாங்க அதிபர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோருக்கு அரசாங்க அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (6)

# ச.தொ.ச.விற்பனை நிலையத்தை மீளத் திறக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் ச.தொ.ச.விற்பனை நிலையத்தை மீளத் திறப்பதற்கு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வடமாகாணத்திற்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

2005 ஆம் வருடம் மூடப்பட்ட மேற்படி விற்பனை நிலையத்தை மீளத் திறப்பதற்கு அமைச்சர் ஏற்கனவே நடவடிக்கை எடுத்திருந்த நிலையில் சிற்சில தடைகள் காரணமாக இந் நடவடிக்கை தாமதமாகியுள்ள போதிலும் ச.தொ.ச. விற்பனை நிலையத்தில் பணியாற்றிய ஊழியர்கள் அமைச்சரை சந்தித்துக் கலந்துரையாடியதன் பயனாக வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட அமைச்சர் மேற்படி விற்பனை நிலையத்தை மீளத் திறப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (6)




# வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ண சுற்றுப் போட்டிகள் மீண்டும் ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

கடந்த அக்டோபர் மாதம் 5 ஆம்திகதி நடைபெற விருந்து காலநிலை சீர்கேடுகள் காரணமாக பிற்போடப்பட்ட வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணப் போட்டிகளை தொடர்ந்து நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர்களால் உருவாக்கப்பட்ட யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 7 ஆவது ஆண்டாகவும் 50 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட இச் சுற்றுப் போட்டியினை நடத்தவுள்ளது. முதலாவது சுற்றின் ஏழாவது போட்டி பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ஜொலிஸ்ரார் அணிக்கும் ஈகிள்ஸ் அணிக்கும் இடையில் நடைபெறவுள்ளது.

கடந்த வருடம் நடைபெற்ற இரண்டாவது காலிறுதிப் போட்டியில் யூனியன்ஸ் கழக அணி வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இறுதிப் போட்டியில் வெற்றிபெறும் அணிக்கு வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணமும் பணப்பரிசிலும், இண்டாவது இடத்தைப் பெறும் அணிக்கு ஜெயா கனகநாயகம் வெற்றிக்கிண்ணமும் பணப் பரிசிலும்,ஆட்டநாயகனுக்குஎஸ்.டி சிவமித்திரன் வெற்றிக்கிண்ணமும் பணப்பரிசிலும், தொடர் நாயகனுக்கு மணிவதனன் வெற்றிக் கிண்ணமும் பணப்பரிசிலும் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் இந்த இறுதிப்போட்டியில் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகத்தின் 7 ஆவது அகவையில் கௌரவிக்கப்பட்ட 10 சோடி இணைப்பாட்ட துடுப்பாட்ட வீரர்களுக்கும் வெற்றிக்கிண்ணமும் பணப்பரிசிலும் வழங்கப்படவுள்ளது.

இவ் வெற்றிக்கிண்ணத்தை 2002 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகமும், 2003 ஆம் ஆண்டு மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக் கழகமும் 2004,2006 ஆம் ஆண்டுகளில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழகமும் 2005 ஆம் ஆண்டில் யாழ்.ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அமரர் வீ.டி.ஜெயரட்ணசிங்கம் அவர்கள் மத்தியின் மைந்தனும்,1949,1951ஆம் ஆண்டுகளில் யாழ்.மத்திய கல்லூரியின் துடுப்பாட்ட அணித்தலைவராகவும், மத்திய கல்லூரி ஆசிரியராகவும்,துடுப்பாட்ட பயிற்றுனராகவும் திகழ்ந்தவர். இவர் தலைமை வகித்த இரு வருடங்களும் மாபெரும் போர் என வர்ணிக்கப்படும் (Big Match) யாழ்.மத்திய கல்லூரி, பரியோவான் கல்லூரி துடுப்பாட்ட போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது. (6)

## வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சாரசபை வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுன்னாகம்மின்பாவனையாளர்சேவை நிலைய மண்டபத்தில் சங்கத் தலைவர் அ.அருள் நாதன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நிர்வாகசபைத் தலைவராக சி.குமாரலிங்கம், போசகராக இ.முத்துரட்ணானந்தம், உபதலைவராக த.நவரட்ணவேல், செயலாளராக ஆ.தங்கராஜா, உபசெயலாளராக இ.பிரசன்னா, பொருளாளராக வி.நெ. ஜோன்பில்லர் ஆகியோரும் செயற்குழு உறுப்பினர்களாக 16 பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.அத்துடன் கடந்த வருடம் ஓய்வு பெற்ற சங்க அங்கத்தவர்கள் 27 பேருக்கு உதவிப் பொதுமுகாமையாளர் இ.முத்துரட்ணானந்தம் பாராட்டுப் பத்திரமும் அன்பளிப்பும் வழங்கிக் கௌரவித்தார்.

அதனைத் தொடர்ந்து பிரதேசப் பொறியியலாளர் எஸ்.ஞானகணேசன் ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு 5 ஆயிரம் ரூபா பெறுமதியான நிலையான வைப்புச் சான்றிதழையும் வழங்கிக் கௌரவித்தார். (6,2)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சமாசத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த 25 ஆம் திகதி அதன் தலைவர் கே.ஏகாம்பரம் தலைமையில் நல்லூர் ஸ்தான சி.சி.த.(சாதனா) பாடசாலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் அங்கமாக நடப்பு வருடத்திற்கான ஆட்சிக்குழு உறுப்பினர்கள் தெரிவு, தற்காலிக தலைவர் கே.நாகேந்திரம் தலைமையில் நடைபெற்றது.

இதில் பின்வருவோர் போட்டி ஏதும் இன்றி ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவராக ஏகாம்பரம், செயலாளராக கே.மனோகரன் (பபா), பொருளாளராக எஸ். குமாரசிவம், உபசெயலாளராக கே.அப்புத்துரை, உப தலைவராக கப்ரின் டி.எம்.எம். குணசிங்கம் (ஜே.பி) அத்துடன் ஆட்சிக் குழு உறுப்பினர்களாக எஸ்.றஞ்சித், எஸ். சிவதர்சன், ஏ.கமலமோகன்,ரி.காந்தறூபன், செல்வி சிந்துஜா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (6-110)

✠✠✠

(சாவகச்சேரி)

தென்மராட்சி இளைப்பாற்று வேதனம் பெறுவோர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 31 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் சங்கத் தலைவர் நா.தண்டாயுதபாணி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்ட ஓய்வூதியர் சங்கங்களின் சமாசத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6,4-29)

## தென்மராட்சி வலய அதிபர்களுக்கான கூட்டம்

(சாவகச்சேரி)


தென்மராட்சி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான மாதாந்தக் கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சகல அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (6-29)

## நலன்புரி நிலையங்களில் மலசலகூடங்கள் அமைக்க நடவடிக்கை

மிருசுவில் திருக்குடும்ப கன்னியர்மடம், மிருசுவில்றோ.க.த.க பாடசாலை ஆகியவற்றில் இயங்கும் நலன்புரி நிலையங்களில் 30 மலசலகூடங்களை அமைக்க "இடம்பெயர்ந்தோருக்கான சர்வதேச அமைப்பு" (ஐ.ஓ.எம்) முன்வந்துள்ளது.

நலன்புரி நிலையங்களில் உள்ள 413 குடும்பங்களினைச் சேர்ந்த ஆயிரத்து 300 பேருக்கு தற்போது 15 மலசலகூடங்களே பாவனையில் உள்ளது. இவற்றினை விட மேலதிகமாக 30 மலசலகூடங்களே அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6-29)



நாகர்கோவில் மேற்கு மக்களுக்கு வலிகண்டி வல்லிபுரம் பகுதியில் வீடு கையளிக்கும் நிகழ்வின்போது இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்ட நிறைவேற்று அதிகாரி எஸ்.குகராஜன், சமூக அபிவிருத்திச் சபைத் தலைவர் வே.சிதம்பரநாதனிடம் மரக்கன்று ஒன்றை கையளிப்பதைக் காணலாம். (மருதங்கேணி நிருபர்)



கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய தரம் 1 மாணவர்களின் கால்கோள் விழாவிற்கு முன்னர் கொழும்புத்துறை வதிரிபீட விநாயகர் ஆலயத்தில் வழிபாடு இடம்பெற்றது. இந்நிகழ்வில் பங்குபற்றிய ஆசிரியர், மாணவர்களைப் படங்களில் காணலாம்.

# இலங்கையில் தமிழர் 51

### ஆரியரும் திராவிடரும்

### ஆரியர் பற்றிய கருத்து முரண்பாடு

இவருடைய ஆய்வின்படி-மூல- இந்து ஐரோப்பியம் ஆசியாவும் ஐரோப்பாவும் சந்திக்கும் இடமாகிய அனட்டோலியா (இன்றைய துருக்கி நாட்டின் கிழக்குப் பாகம்) என்னும் இடத்தில் இற்றைக்கு 9000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மக்கள் பேசிய மொழியாக இருந்தது. அங்கிருந்த உழவர்கள் உழவுத் தொழிலைப் பரப்பியபோது கூடவே அவர்கள் மொழியும் பரவத் தொடங்கியது.

இன் றைய கிரேக்க நாட்டில் முதல் தடவையாக உழவுத் தொழிலில் ஈடுபட்டவர்கள் அனட்டோ லியாவிலிருந்து புலம்பெயர்ந்த உழவர்களின் வழித்தோன்றல்களாவர். அவர்கள் ஒரு இந்து ஐரோப்பிய மொழியைப் பேசியிருப்பர். இதே போல, உழவுத் தொழிலைக் கிழக்கிலிருந்த நிலப் பகுதிகளிலும் அறிமுகப் படுத்திய உழவர்களே இந்து- ஐரோப்பிய மொழிகள் ஈரான் மற்றும் இந்தியா போன்ற இடங்களுக்குப் பரவுவதற்கும் காரணமாய் இருந்தனர்.

அனட்டோலியாவிலிருந்து கிழக்கு நோக்கி ஈரான், இந்தியா ஆகிய இடங்களுக்கு இந்து-ஐரோப்பியம் பரவியதற்குப் பல விளக்கங்களை ரென்புறூ முன்வைத்துள்ளார். உழவுத் தொழில் அனட்டோலியாவிலிருந்து தென்கிழக்கு நோக்கிப் பரவி ஈரானுக்கும், அப்பால் சிந்துவெளிக்கும் பரவியது என்பது ஒரு விளக்கக் கோட்பாடு .இதன்படி,பொ.ஆ.மு. 6000 அளவில் அனட்டோலியாவிலிருந்து படிப்படியாக உழவர்கள் தங்கள் புதிய தொழில் நுட்பத்தையும் மொழியையும் ஈரானிலும் அதற்கப்பாலும் பரப்பினர். இது சிந்துவெளி நாகரிகம் தோன்று முன்னராகும். இதை ஏற்பதாயின்,சிந்துவெளி நாகரிகம் தோன்றிய காலத்தில் இந்து-ஐரோப்பிய மொழி பேசுவோர் வாழ்ந்தனர் என்று கொள்ள வேண்டும்.ரென்புறூ வழங்கும் இரண்டாவது விளக்கம் முன்னர் பல அறிஞர்கள் கொடுத்த விளக்கமாகும். அதாவது இந்து-ஐரோப்பிய மொழி பேசுவோர் நாடோடிகளாய்ச் சிந்துவெளியை நோக்கிப் படையெடுத்து வந்து தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டியதன் விளைவாக அவர்களுடைய மொழி அங்கு பரவியது என்பதாகும்.

இவ் விரு விளக்கங்களுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏற்றுக்கொள்வது இலகுவான செயல ன்று என்பதை ஒப்புக்கொள்ளும் ரென்புறூ, மூன்றாவது விளக்கமாக மேற்கூறிய இரண்டு கோட்பாடுகளும் செயற்பட்டிருக்கலாம் என் பார். அதாவது, உழவுத் தொழிலின் பரம்பல் மூமும் நாடோடிகள் படையெடுப்புக்கள் மூலமும் இந்து-ஐரோப்பிய மொழிகள் சிந்து சம வெளியை அடைந்திருக்கலாம் என்ப தாகும்.

### இந்திய வரலாறும் ஆரியர் பிரச்சினையும்

ஆசியர் என்ற ஓர் இனக் குழுவினர் சிந்து வெளிக்குப் படையெடுத்து வந்து அங்கிருந்த நகரங்களை அடக்கிய பின் தம் ஆதிக்கத்தினை வடமேற்கில் நிறுவினர் எனப்பல அறிஞர்கள் ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு முன் கருதினார். சிந்து வெளி நாகரிகத்தின் வீழ்ச்சிக்கு ஆரியர் படையெடுப்பே காரணம் என்றும் சிலர் நம்பினர். முதல் வேத நூலாகிய ரிக் வேதத்தின் சான்றுகளை வைத்து ஆரியர் வட மேற்கிலிருந்து இந்தியாவுக்குள் நுழைந்தனர் என்றும் அவர்களுடைய தலைவர்களுள் ஒருவனாகிய இந்திரன் சிந்து வெளி நகரங்களை அழித்துப் புரந்தரன் புரங்களை அழித்தவன் என்ற விருதைப் பெற்றான் என்றெல்லாம் கூறப்பட்டது. கடந்த சில தசாப்தங்களாக இத்தகைய படையெடுப்புக் கருத்துக் கைவிடப்பட்டுள்ளது.

இப்பொழுது முக்கிய கருத்துக்களாக இருப்பவை புலப் பெயர்ச்சிக்கருத்தும் இந்தியத் தாயகக் கருத்துமாம். பல அறிஞர்கள் படையெடுப்புக் கருத்தை ஏற்காது இந்து ஐரோப்பிய மொழி (சமஸ்கிருதம்) பேசியோர் புலம் பெயர்ந்து இன்றைய பாகிஸ்தான் பிரதேசத்துக்கு வந்து அங்கு வாழ்ந்த மக்கள் மத்தியில் தம் மொழி பரவுவதற்குக் காரணமாய் இருந்தனர் என்ற கருத்தை ஆதரிப்பர். வேறு சிலர் இதனை ஏற்காது மூல இந்து ஐரோப்பிய மொழி பேசுவோருடைய தாயகம் இந்தியா எனக் கொள்வார்.

புலப் பெயர்ச்சிக் கருத்தை ஆதரிப்போருள் மிக முக்கியமான ஒருவர் இந்திய வரலாற்றாசிரியரான பேராசிரியர் ரோமிலா தாபர் ஆவர். இப் பிரசித்தி பெற்ற அறிஞரின் கருத்து இதுவாகும்.

ஓர் ஆதிக்கம் மிகுந்த பண்பாட்டைச் சேர்ந்தோர் எல்லை கடந்து வட மேற்கு இந்தியாவுக்குப் படையெடுத்து வந்து அவ்விடத்தைக் கைப்பற்றியதற்குச் சான்று உண்மையில் இல்லை. அங்குள்ள பெரும்பாலான தொல்லியல் தலங்கள் படிப்படியாகப் பண்பாட்டு மாற்றம் ஏற்பட்டதையே காட்டுகின்றன. வடமேற்கின் எல்லைப் புறங்கள் சிந்துவெளிப் பண்பாடு தோன்று முன்னரே ஈரானுடனும் மத்திய ஆசியாவுடனும் தொடர்பு கொண்டிருந்தன. இம் முழுப் பிரதேசத்திலும் கருத்துக்களும் பண்டங்களும் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்குப் பரிமாறப்பட்டன. இந்நிலை பிற்பட்ட காலங்களிலும் நீடித்தது. இப்பின்னணியில் பார்க்கும் போது காலத்துக்காலம் இந்து ஐரோப்பிய மொழி பேசிய சிறு சிறு குழுவினர் வடமேற்குப் பகுதிக்கு வந்தனர் என்று கொள்வதில் பிரச்சினையில்லை. இவர்கள் மந்தை மேய்ப்போராக அல்லது உழவர்களாக அல்லது நாடோடி வணிகர்களாக வந்திருப்பர். இப்படியான தொடர்பால் வடமேற்கில் பேசப்பட்ட சில மொழிகள் இந்து ஐரோப்பிய மயமாக்கப்பட்டு இருக்கலாம்.

ரோமிலாதாபர் கூறுவது ரென்புறூ முன்வைத்த கோட்பாட்டுக்கு ஆதரவு கொடுப்பதாக அமைகின்றது. இவர் படையெடுப்புக் கருத்தை நிராகரித்து இந்து-ஐரோப்பிய மொழி பேசியோர் காலத்துக்காலம் வந்து படிப்படியாக பண்பாட்டு மாற்றத்தை விளைவித்தனர் என்ற கோட்பாட்டை ஏற்கின்றார். அது மட்டுமின்றி இந்து -ஐரோப்பிய (இந்தியாவில் இந்து-ஆரிய) மொழி பேசியோர் இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் குடியிருப்புக்களை அமைத்த போது மூல திராவிட

பேராசிரியர்
கா. இந்திரபாலா

மொழி மற்றும் ஆஸ்திரே- ஆசிய மொழி பேசியோர் மத்தியில் குடியேறினர் என்பதை அழுத்திக் கூறுகின்றனர். இந்து -ஆரிய மொழிகள் பின்னர் வடக்கில் ஆதிக்கம் பெற முன்னிருந்த மொழிகள் அழிந்து போய் ஒருசில ஒதுக்கிடங்களில் மட்டும் தப்பியிருந்து இன்று வரை நிலைத்துள்ளன. இவ்வாறு ரோமிலா தாபர் கூறுவது வட இந்தியாவில் தாய்மொழி மாற்றம் ஏற்பட்ட வரலாறாகும்.

(தொடரும்)

# எயிட்ஸ்/எச்.ஐ.வி. அதிகரிப்பை தூண்டக்கூடிய சமகால மாற்றங்களும், தடுப்பதற்கான அணுகுமுறைகளும் 9

பாடசாலையை விட்டு இடைவிலகிய இளம் பராயத்தினருக்கு பால் நிலை சார்ந்த கல்வியைப் பெறுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல். யாழ். மாவட்டத்தில் 2008 ஆம் ஆண்டில் 250 க்கும் அதிகமான பிள்ளைகள் பாடசாலைக் கல்வியை விட்டு இடை விலகி உள்ளனர். குறிப்பாக சண்டிலிப்பாய் பிரதேச செயலகர் பிரிவில் 42 ஆண்களும் 16 பெண்களும் இடை விலகியுள்ளமையை யாழ். செயலகப் புள்ளிவிபரங்கள் உறுதிப்படுத்துகின்றன. குடும்ப வறுமையும், சிறு வயதில் தொழில் நாட்டம்,குடும்ப பொறுப்பு நிமித்தம் பாடசாலையிலிருந்து இடை விலகும் தன்மைக்கு காரணமாக அமைகிறது.

இளவயதினரையும் ,குடும்பத் தலைவர்களையும் இந்நோய் அதிகம் தொற்றுவதால் தனிநபர் , குடும்பம் சார்ந்த பொருளாதார உற்பத்தி பாதிப்படைகிறது. ஆகவே பாதிக்கப் பட்டவர்களுக்கு விசேட நிவாரணத்திட்டங்களை முன்னெடுத்தல் அவசியமாகின்றது.

அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைமைத்துவம் , முகாமைத்துவம் , நேர்த்தன்மையில் இயங்குவதை உறுதிப்படுத்தல். இது முதலீடுகள் உரிய திட்டங்களுக்கு கிடைக்கவும் , பாதிக்கப்பட்டவர்களை மீட்சி பெறச் செய்யவும் உதவும்.

பாடசாலை மட்ட சுகாதார நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தல், முறைசார்ந்த, முறை சாரா கலைத் திட்ட உள்ளடக்கங்களை HIV தொடர்பாக மையப்படுத்தி வெளிக்கொணரமுடியும். இணைக்கலைத் திட்ட செயன் முறைகளான நாடகம், பொம்மலாட்டம், சிறுவர்அரங்கம், தாள லயம் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களை அரங்குகள் மூலம் வெளிக்கொண்டு வருதல்.


கல்வித் திட்டத்தில் ஊடாக பால்சார்ந்த அறிவூட்டல்களை வழங்குதல் இதற்கு மலர்ந்த யெளவனம் இனப்பெருக்க சுகாதார உபதேச வழிகாட்டி மற்றும் சுகாதார உடற் கல்வி பாடநூல்களை கற்பதற்கு தூண்டுதல் வேண்டும்.இதற்கு மியன்மார் நாட்டில்“ஒரு புனிதமான வாழ்க்கைத் திறன்” ஊடான செய்முறையில் ஆரோக்கியத்தை அடைவதற்கான நிகழ்ச்சித் திட்டம் தரம்2 முதல்9 வரை உள்ளடக்கப்படுவதை சுட்டிக் காட்ட முடியும். ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் முறைகளில்HIV யைமையப்படுத்திய ஒப்படை , விசேட களஆய்வு, விவாதம் , கலந்து ரையாடல் போன்ற நுட்பங்களையும் , கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டு முறைகளை மனப்பாங்கு ரீதியான மாற்றத்தை நோக்கி முன்னெடுக்க முடியும்.

பாடசாலை மாணவர்கள், சமூக அங்கத்தவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கட்டுரை, சுவரொட்டி, ஓவியப் போட்டிகளை நடாத்துதல்.

அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை உயர் கல்வி நிறுவனங்களான பல்கலைக்கழகம், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, தொழில்நுட்ப நிறுவனம் சார்ந்த வகையில் விரிவாக்கல்.

வயது கூடிய பிள்ளைகளின் கல்விக்கான மாற்று ஏற்பாட்டை உருவாக்கல். தன்சானியா, ஐக்கியகுடியரசு நாடுகளில் பாடசாலையை விட்ட 3 மில்லியன் வயது கூடிய பிள்ளைகளுக்கும் யெவனப் பருவத் தினருக்கும் கல்வி புகட்ட 3வருட கல்வித் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.இளம் தாய் மாரை திரும்ப பாடசாலைக்கு ஊக்கமளிக் கும் செயற்பாடுகள் சம்பியா, உபசகாரன் போன்ற ஆபிரிக்க நாடுகளில் முன்னெடு க்கப்படுகின்றன. கர்ப்பிணிகள் பிள்ளைகள் பிறந்த பின் பாடசாலைக்கு செல்ல வாய்ப் பளிக்கப் பட்டுள்ளது. மாலாவி தேசம் தேசிய பெண்ணியல் கொள்கையை பிரகடனம் செய்துள்ளது. வளர்முக உலகில் பெண் கல்வி முதலீடுகள் உயர்ந்த இலாபம் தரும் முதலீடு என உலக வங்கி குறிப்பிடுகிறது. இவை எமது பிரதேச மாற்றங்களுக்கான எடு கோள்களாக கொள்ளமுடியும்.சமூகம் எதிர் கொள்ளும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக் கின்ற அல்லது அவற்றை எதிர்கொள்ளும் தகமையைஏற்படுத்த வாய்ப்பளிப்பது சமுதாயக்கல்வி ஏற்பாடாகும். தொற்று நோய் என்பது சமூக சவாலாகும். சமூக அங்கத்தவருக்கு பாதுகாப்பை வழங்கக் கூடிய அறிவூட்டல்களை இக்கல்வித் திட்டத்தினால் வழங்க முடியும்.

அறிவூட்டல்பிரச்சார இயக்கத்தை முன்னெடுத்தல் உகண்டாவில் 1990இல் 30% வளர்ந்தோரில் காணப்பட்டஇந்நோய் இத் திட்டத்தின் மூலம்10% ஆக குறைவடைந்ததை தரவுகள்ஆதாரப்படுத்துகின்றன.




விசேடகல்விச் செயற்பாட்டில் உட் படுத்தல் கல்வியூடாக பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் கல்விக்கு சம வாய்ப்பு அளிக்க முடியும். உளவள ஆலேசனைசெயன்முறை, நட்பு பாடசாலை உருவாக்கம் , ஆரோக்கியமான சூழ் நிலையை ஏற்படுத்தும்.

ஊடகச் செயன் முறையில் அச்சு, இலத்திரனியல் ஊடகங்கள் முக்கியம்பெறுகிறது. நோய்சார்ந்த விளக்கங்களைஅல்லது பாதிப்புக்களை தகவல், விவரணக்கட்டுரை, பேட்டி, படம், காட்டூன், விளம்பரம் சிறப்புக்கட்டுரை மற்றும் ஆசிரிய தலையங்கம் ஊடாகச் சமூகத்திற்கு கொடுக்க முடியும். வானொலி, தொலைக்காட்சிகளில் நாடகம், தாள லயம், குறும்படம், வில்லுப்பாட்டு போன்ற முறைகளினூடாக வெளிக் கொண்டு வர முடியும். பிரதேச பத்திரிகைகளில் வாரந் தோறும் சுகாதாரப் பத்திரிகையை வெளிக் கொண்டு வருதல் மற்றும் வானொலி தொலைக்காட்சி நிகழ்ச்சி அட்டவணையில் நோய் தொடர்பான விடயங்களை வெளிக்கொண்டு வருதல் சமூக அங்கத்தவர் அனைவருக்கும் பயனுடையதாகஅமையும்.

சமுதாய வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டத்தை ஒழுங்கமைத்தல் .அல்பேனிய நாட்டில்13-18 வரையான பிள்ளைகள் தாங்களாகவே “ ட்றொக்” என்ற நிகழ்ச்சியில் எயிட்ஸ், ஆரோக்கியம் , உரிமை சார்ந்த நிகழ்ச்சிகளை ஒலிபரப்புச் செய்கிறார்கள்.

செய்தி மடல்வெளியீடு செய்தல் இதன் ஊடாக பிரதேச மட்டம் எயிட்ஸ் சார்ந்த விடயம், தரவுகளை அறிவித்தல், அறிவுறுத்தல்களை சமூகத்திற்கு வழங்குதல்.

பொது இடங்களில் வீதிப் பதாதை, விளம்பரப்பலகை காட்சிப்படுத்தல்

சர்வதேச எயிட்ஸ் தின நிகழ்வுகளைசமூக விழிப்புணர்வைஏற்படுத்தும் வகையில் பல மட்டங்களில் விரிவுபடுத்த சுகாதார திணைக்களம் ஒழுங்குகளை மேற்கொள்ளல். அவ் வேளைகளில்ஊடகப் பயன்பாட்டை பயனுடையதாக மாற்றுதல்.

சுகாதார தொடர்பாடளாலர் ஊடாக அறி

புஸ்ராஜசிங்கம் ஸ்ரீராஜேஸ்வரன்
ஆசிரியர்
யா/சரவணை சின்னமடு றோ.க.த.க.பாடசாலை

வூட்டம் பெறல்,தேவையை உருவாக்குதல், நடத்தையை மாற்றிக் கொள்ள முனைதல், கையாளுதல், புதியநடத்தையை உருவாக்கிப் பேணுதல் என்றஅடிப்படையின் பிரதேசத்திற்கு பொருத்தமான வேலைத் திட்டத்தை முன்னெடுத்தல்.

இவ்வாறாக சமகாலHIV அதிகரிப்பை தூண்டக்கூடியமாற்றங்களைத்தடுக்க,குறைக்க உடன்பாடான அணுகு முறைகளை முன்னெ டுத்தல் தமது பிரதேச எதிர்கால சந்ததியினரின் பேண்தகு சமூக ஆரோக்கி யத்தை வளம் உள்ள தாக அமைய உறுதிப்படுத்தும். (முற்றும்)

# வேலை வாய்ப்புகளை அள்ளித் தரும் ஒப்பரேசன் ரீசேர்ச் துறை

இன்றைய சூழலில் நிறுவனங்களை நிர்வகிப்பது சவால்களைஉள்ளடக்கியது. அன்றாடம் மாறும் பொருளாதார, தொழில் நுட்ப மாற்றங்கள் நிறுவனங்களின் போக்கையே மாற்றிவிடும் தன்மை கொண்டுள்ளன. ஒரு நிறுவனம் எதிர் கொள்ளும் கடுமையான மற்றும் சிக்கலான பிரச்சினைகளை இனம்கண்டு, நிர்வாகத்திற்குரிய முக்கிய முடிவுகளை அறிவிக்கும் நிர்வாகவியலின் கருவியாக செயல்படும் துறையே ஒபரேஷன்ஸ் ரீசர்ச் (ஒ.ஆர்) துறையாகும். நல்ல தகவல் பரிமாற்றம் மற்றும் தெளிவான முடிவெடுக்கும் தன்மைக்கு இத் துறையின் பங்கு அளப்பரியதாகும்.

ஒரு நிறுவனத்தின் நிர்வாகத்திற்கு தேவையான தகவல்களை தருவது, எதிர்பாராத விளைவுகளைக் கட்டுப்படுத்துவது, நிறுவனத்தை நிர்வகிக்க தேவையான குறுகிய கால மற்றும் நெடுங்கால உத்திகளை வரையறுப்பது போன்ற பிரிவுகளில் ஒ.ஆர். பெரிதும் உதவுகிறுது. ஒ.ஆர். படித்து முடிப்பவர்களுக்கு வேலைவாய்ப்புகள் தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளதுடன் தேவைப்பாடும் கூடிக் கொண்டே வந்துள்ளது. ஒ.ஆர் படிப்பின் பயன்பாடு, துறைகளைக் கடந்து விரிவுபட்டுக் கொண்டே வருகிறது.

வியாபாரச் சூழலில் இயங்கும் மாறுபட்ட பல்வேறு துறைகளிலும் ஒ.ஆர் முக்கிய பங்கு வகிப்பது அதன் சிறப்பம்சமாக உள்ளது. சரியான முடிவுகளைத் தருதல், நிஜ வாழ்க்கையை மையமாகக் கொண்டு உறுதியான மற்றும் எதிர்பார்க்கத் தகுந்த முடிவுகளை தருதல் போன்ற பல அம்சங்களைக் கொண்டுள்ளதால் ஒ.ஆர் துறையின் பயன்பாடு அரச துறை, வியாபாரம், பொறியியல்,பொருளாதாரம் , இயற்கை மற்றும் சமூக அறிவியல் போன்ற குறைந்த ஆதாரங்களைக் கொண்டு செயல்படும் துறைகளிலும் அதிகமாகி உள்ளது.

ஒ.ஆர். துறையிலிருந்து கிடைக்கும் பயன்கள், பின்வரும் அடிப்படைகளிலேயே உருவாகிறது. எந்தப் பிரிவைப் பற்றி ஆராய விரும்புகிறோமோ அது கணிதவியல் மாதிரியாக உருவாக்கப்படுகிறது. இவற்றில்



முக்கியமான காரணிகளை வடிவப்படுத்தி, அதிலிருந்து நிர்வாகம் செயல்பட உதவும் மிக முக்கியமான முடிவுகள் எடுக்க வழிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒரு பிரச்சினையை தனியாக அணுகாமல், அது சார்ந்திருக்கும் மொத்த அமைப்பையும் அறிவியல் பூர்வமாக அணுகுவதன் மூலம் வெற்றிகரமான முடிவுகள் எடுப்பது சாத்தியமாகிறது.

பிரச்சினைகளுக்கான தீர்வுகளின் அமைப்பை ஆராய்ந்து தொடர்ந்து வெற்றியைப் பெறும் வகையிலான வரையறைகள் ஆராயப்படுகின்றன.




இந்தத் தீர்வுகளை கணிதவியலுக்கான துல்லியத்துடனும் அதிகபட்ச நேர்த்தியுடனும் காண்பது ஓ.ஆர் துறையின் சிறப்பாகும்.

ஓ.ஆர் துறை, முடிவுகளுக்கான முக்கியத் துறையாக இருப்பதால் இதில் இணைய விரும் புபவர்களுக்கு சுய ஈடுபாடு, கிரியா சக்தி, உற்சாகம் மற்றும் தொழில் நுட்ப திறமைகள் தேவைப்படுகின்றன. நிர்வாகவியல் துறையில் ஈடுபாடு கொண்டவர்கள் மட்டுமின்றி, எத்துறையில் இணைய விரும்புபவர்களுக்கும், ஓ.ஆர். படிப்புகள் மிக நல்ல பலனைத் தரும் சக்தி கொண்டுள்ளது.

ஓ.ஆர் படித்தவர்கள் புரஜக்ட்களில் பணியாற்ற வேண்டிய வேலைகள் இருக்கும். கீழ் நிலையில் இருக்கும் புளோர் மனேஜ்மென்ட்டில் தொடங்கி நிர்வாக் கூட்டம் வரை உள்ள ஒவ்வொரு பிரிவு வேலையிலும் உள்ள நுணுக்கமான அடிப்படைகளைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் இத்துறைக்கு அடிப்படைத் தேவை யாக உள்ளது.

ஆராய்ந்து அறியும் திறமை, முடிவுகளை தீர்க்கமாகப் பெறும் வேகம், உறவுகளை நன்றாக மேம்படுத்திக் கொள்ளும் திறமைகளைப் பெற்றிருப்பவர்கள் ஓ.ஆர் படிப்புதன் மூலம் முது நிலை நிர்வாகப் பணிகளில் மேன்மை பெறலாம்.ஓ.ஆர் துறையின் உபயோகம் துறைகளின் வரையறைகளைக் கடந்து தொடர்ந்து விரிவுபட்டுக் கொண்டே வந்துள்ளது. ஓ.ஆர். பயன்படுத்தப்படும் சில துறைகளைப் பார்க்கலாம்.

**போக்குவரத்து மற்றும் பயணம்**

விலைநிர்ணயம், இருக்கைகளின் எண்ணிக்கை, வருமான நிர்ணயம் மற்றும் ஈல்ட் மனேஜ்மென்ட்

**சுகாதாரத் துறை**

நிதிச்சேவை, அரச சார்ந்த பணிகள், பல் கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள், *பாதுகாப்புத்துறை*, கன்சல்டன்சி நிறுவனங்கள், டேட்டா பேஸ் மார்க்கெட்டிங், பிசினஸ் பிராசஸ் ரீ இன்ஜினியரிங், *உற்பத்தித் துறை*, நீர்வளம், தகவல் தொழில்நுட்பம் , சுரங்கத்துறைகள்.

இன்றைய உலகம் தொடர்ந்து மாறி வரும் தன்மை கொண்டிருப்பது ஒ.ஆர் துறையின் வளர்ச்சிக்கு முக்கிய காரணியாக உள்ளது. சாதாரணாக ஆரம்பித்த துறை யின் வளர்ச்சி அதன் உபயோகத்தின் காரண மாக பல துறைகளில் இன்று விரிவுபட்டு வருகிறது. நிறுவனங்களின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றும் ஒ.ஆர் துறையின் வளர்ச்சி தடைகளின்றித் தொடரும் என்பதும் நிர்வாகவியலின் மிக முக்கிய பகுதியாக இத் துறை பரிமாண வளர்ச்சி கண்டுள்ளது என் பதும் இத் துறையில் இணைபவர்களின் எதிர்காலம் பிரகாசமாக மாறும் என்பதை உணர்த் துகிறது.

## ஆர்.யூ.பாலமுருகன்

ஒ.ஆர் துறையில் இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்புகள் உள்ளன. இவற்றை இந்தியாவில் உள்ள பல்வேறு பல் கலைக்கழகங்களில் படிக்கலாம். இவை தவிர இந்தியாவில் உள்ள மனேஜ்மென்ட் மற்றும் இன்ஜினியரிங் கல்லூரிகள் வாயிலாகவும் படிக்கலாம்.

இலங்கையில் உள்ள மாணவர்களும் இத்துறையில் கல்வி பயின்று சிறந்த எதிர் காலத்தை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். இதற்கு இந்தியாவில் உள்ள கல்லூரிகளில் அனுமதியைப் பெற்று கல்வி பயில வேண்டும்.

# பாதுகாப்பான பாஸ்வேர்டை அமைக்கும் வழிமுறை

கொம்பியூட்டர் மற்றும் இன்டர்நெட் பயன்பாட்டில் நம் பாதுகாப்பிற்கு பல இடங்களில் பாஸ்வேர்ட்களை அமைக்க வேண்டியுள்ளது. இதனை அமைக்கையில் பெரும்பாலும் நாம் நமக்குத் தெரிந்தவர்களின் பெயர், பிறந்த திகதி, ஊரின் பின் கோட் எண் போன்றவற்றை கலந்து அமைக்கிறோம்.

இந்த தகவல்கள் எல்லாம் உங்களை சுற்றியுள்ள நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்குத் தெரிந்ததாக இருக்கும். அவர்கள் ஒரு பாதியைத் தெரிந்துகொண்டாலே அடுத்த பாதியை அவர்களே அறிந்து கொம்ப்யூட்டரில் மற்றும் இணையத்தில் உங்கள் பகுதிக்குள் நுழைந்துவிடுவார்கள். அதே நேரத்தில் உங்கள் வங்கி அக்கவுண்ட பாஸ் வேர்ட்டை அறிந்து கொண்டால் உங்கள் பணமெல்லாம் மாயமாக மறைந்து விடும். இதற்கு என்ன செய்யலாம்? பாதுகாப்பான பாஸ்வேர்ட்களை அமைக்க வேண்டும். அதனையும் அதி பாதுகாப்பாகப் பயன்படுத்த வேண்டும். ஒரு சிலர் எத்தனை பாஸ் வேர்ட்களை மனதில் நினைவில் வைத்துக் கொள்வது என்று ஒரே பாஸ்வேர்ட்டை அமைத்திருப்பார்கள் . இது மிகவும் மோசமான செயலாகும். ஒன்றை அறிந்து கொண்டால் உங்களின் அத்தனை இரகசிய இடங்களுக்கும்அவர்களால் செல்லமுடியும் . எனவே பாதுகாப்பான பாஸ்வேர்ட் அமைப்பது எப்படி என்றும் அதனைப் பாதுகாப்பாக பயன்படுத்தவது எப்படி என்றும் இங்கு காணலாம். பாதுகாப்பான பாஸ்வேர்ட் என்பது எழுத்துக்களும் எண்களும் இணைந்த கோவையாக இருக்க வேண்டும். சொற்கள் அல்லது எண்கள் மட்டும் என்றால் ஒரு சிலரால் எளிதாகக் கண்டுபிடிக்க முடியும் இரண்டும் கலந்தது என்றால் நிச்சயம் க ண்டுபிடிக்க முடியாது.

இதனால் தான் சில வங்கிகள் மற்றும் இணையத்தளங்கள் பாஸ் வேர்ட்டில் கட்டாயம் எழுத்துக்களும் எண்களும் இருக்க வேண்டும் என நிபந்தனை விதிக்கின்றன. ஒரு பாஸ்வேர்ட் குறைந்தது 8 கெரக்டர்களும் அதிகபட்ச அளவில் 12ம் கொண்டு அமைக்கப்பட 'வேண்டும். இதில் அமையும் எழுத்துக்களில் கெப்பிட்டல் மற்றும் சிறிய எழுத்துக்களும் இருக்கலாம். குறைந்தது. ஏதேனும் ஒரு ஸ்பெஷல் கெரக்டர் இருக்கலாம்.(*-%+) உங்களுடைய பெயர், பிறந்த நாள், திருமண நாள் ஆகிய வற்றுடன் தொடர்புகொண்டதாக இருக்க கூடாது. எனவே எடுத்துகாட்டாக S641Q67M8 என இருக்கலாம்.

இதில் 9 கெரக்டர்கள் உள்ளன. பெரிய மற்றும் சிறிய எழுத்துக்கள், எண்கள் மற்றும் ஸ்பெசல் கெரக்டர்கள் உள் ளன. முதலில் இதனை நினைவில் வைத் துக் கொள்வது கடினமாக இருக்கும். ஆனால் போகப் போக சரியாகிவிடும். இதற்குப் பதிலாக Excellent போன்ற சொற்களை பாஸ் வேர்ட்டாக அமைக்கலாம். அதேபோல் மற்று மொரு கெட்ட பழக்கமும் பலரிடம் உள்ளது.

அது பாஸ்வேர்ட்களை எழுதி வைப்பது. எத்தனை நாட்களுக்கு எழுதி வைத்துள்ள ஏட்டினைப் பாதுகாப்பாக வைக்க முடியும். நீங்கள் இல்லாத நேரத்தில் அதனை யாரும் பார்த்துவிட்டால் எளிதாக மற்றவர்கள் பயன்படுத்தி விடுவார்கள். எனவே எதையும் எழுதி வைத்துக் கொள்ளாமல் மனதில் வைத் துக் கொள்ள வேண்டும். ஒரு சிலர் ஆண் டாண்டு காலமாக பாஸ்வேர்டினை தங்கள் சொந்தப் பெயர் போல் மாற்றாமல் வைத் திருப்பார்கள்.

இதுவும் தவறாகும். அடிக்கடி பாஸ் வேர்டினை மாற்ற வேண்டும். ஏனெ னில் பல இணையத்தளங்கள் பயன்படுத் தும் மால்வேர் போன்ற புரோகிராம்கள் இந்த பாஸ்வேர்ட்டினை அறியும் வகையில் உருவாக்கப்படுகின்றன.

அவையும் பாஸ்வேர்டினை அறிந்து அந்த புரோகிராமினை அனுப்பியவர்களுக்கு அனுப்பிவைக்கின்றன. இது போன்ற நிகழ் வுகளை தவிர்க்க பாஸ்வேர் ட்களை மாற்று வது நல்லது.

# உங்களுக்கு தெரியுமா ?

◆சிசிடிவி என்று சொல்லப்ப டுவது Closed Circuit TV ஆகும். இதில் பல இடங்க ளில் கமராக் கள் வைத்து அவற்




றிலிருந்து பெறப்படும் இமேஜ்கள் கொண்ட்ரோல் செய்யப்பட்டுக் காட்டப்படும். பெரிய ஜவுளிக் கடைகளில், திணைக்கள சஞ்சிகைகளில் அமைச்சர்களின் பாதுகாப்பு சம்பந்தமான அலுவலகங்களில் இதுபோல கமராக் கள் இணைக்கப்பட்டு கட்டுப்பாட்டு அறை ஒன்றில் இவை கண்காணிக்கப்படும். எத்தனை கமராக்களை இதுபோல இணைக்கலாம்? உலகிலேயே அதிக எண்ணிக்கையில் குளோஸ்ட் சர்க்யூட்டில் இணைக்கப்பட்ட கமராக்களின் எண்ணிக்கை எவ்வளவு? அவுஸ்திரேலியாவில் தான் இது உள்ளது. நியு சவுத் வேல்ஸ் சிட்டி ரயில் சிஸ்டத்தில் மொத்தம் 7ஆயிரம் கமராக்கள் ஒரு நெட்வேர்க்கில் இணைக்கப் பட்டு இயங்குகின்றன.

◆ உங்கள் மொபைல் போனுக்கான எமர்ஜென்ஸி எண் 112. உங்களுக்கு மொபைல் சேவை தரும் நிறுவனத்தின் நெட்வோர்க் எல்லையிலிருந்து விலகிச் செல்லும் போது 112 என்ற எண்ணை டயல் செய்தால் உங்கள் போன் அருகில் இயங்கும் ஏதேனும் இன்னொரு மொபைல் நெட்வேர்க்கினை அணுகி எமர்ஜென்ஸிக்கான டயல் செய்ததை நிறைவேற்றும். இதன் இன்னொரு அதிசயம் என்னவென்றால் ஒரு போனின் கீ போர்டினை லொக் செய்திருந்தால் கூட இந்த எண்ணை டயல் செய்திடலாம்.

◆ "பூப்போல இதைப் பார்த்துக்கொள்ளுங்கள்" என எளிதில் உடையும் பொருட்களுக்கும் புதுமணப் பெண்ணுக்கும் சொல்வார்கள். இது ஐ-பாட் சாதனத்திற்கு 100% பொருந்தும். இதில் மிக மெல்லிய சிறிய ஹார்ட் டிஸ்க் இயங்குகிறது. சற்றுக் கீழே போட்டாலும் உடனே அது பாதிக்கப்பட்டு இயக்கம் தடைப்படுகிறது. எனவே மிகக் கவனமாகக் கையாளுங்கள். அதேபோல ஐ- பாட் சாதனத்னத்தின் ஸ்கிரீனையும் கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.மிக எளிதாக ஸ்கிராட்ச் அடையும்.

◆கடைகளில் கல்லாப் பெட்டி எனப்படும் கேஷ் பொக்ஸைக் கவனித்துக் கொண்டிருப்பவரை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா? எங்கு நகன்றாலும் உடனே அதனைப் பூட்டி சாவி யை எடுத்துக்கொள்வார்.பின் மீண்டும் அமருகையில சாவியைப் பயன்படுத்தி பெட் டியைத் திறப்பார். பணத்தைப் பாதுகாக்கவே இந்த ஏற்பாடு என்றால் அதைக் காட்டி லும் அதிக மதிப்புள்ள டேட்டா உள்ள கணனியை எவ்வளவு பாதுகாக்க வேண்டும்.

இதற்கெனவே சில பூட்டுக்கள் அப்டேட் டிங் சிஸ்டத்தில் உள் ளன. நீங்கள் விண் டோஸ் எக்ஸ்பி பயன்



படுத்தினால் Ctrl + Alt+ கீகளை ஒரு சேர அழுத்தி எழுந்து வரும் விண் டோவில் Lock Computer என்பத னைத் தேர்ந் தெடுக்கவும். இது உங்கள் லாக் இன் திரையைக் கொண்டு வரும். உங்கள் கொம்ப் யூட்டர் அப்போதைக்கு பூட்டப்படும். நீங்கள் விஸ்டா பயன்படுத்துபவராக இருந் தால் கீழாக அடிப் பகுதியில் உள்ள ஸ்டார்ட் மெனுவில் ஒரு பேட்லாக் ஜக்கன் இருப்பதைக் காணலாம். அதில் ஜஸ்ட் கிளிக் செய்தல் போதும். கொம்ப்யூட்டர் பூட்டப்படும். உங்கள் கம்ப்யூட்டர் மேக் கொம்ப்யூட்டராக இருந்தால் ஷிப்ட்- கமாண்ட்-க்யூ அழுத்தினால் லாக் அவுட் ஆவீர்கள்.



◆ மைக்ரோ ஓவன் அடுப்பு இப்போதெல்லாம் மிக அதிகமாகப் பயன்படுகிறது. இதில் வேக வைக்கும் உணவு மிக எளிதாக விரை வில் சூடுபடுத்தப்படுவதால் சில வேளைகளில் சீராக உணவுப்பொருள் வேகவில்லை என்று பலர் குற்றம் சாட்டுகின்றனர். பொதுவாக மைக்ரோ ஓவன் அடுப்புகள் சமைத்த உணவுப் பண்டங்களை மீண்டு சூடு படுத்தவே பயன் படுகிறது. ஏற்கனவே அதனைச் சமைத்திடு கையில் என்ன சூட்டில் அது தாரிக்கப்பட்ட தோ அந்த சூட்டின் அளவில் மீண்டும் சுட வைக்கப்பட வேண்டும். இல்லை என்றால் ஆறிப்போன உணவில் பக்டீரியா இருந் தால் அது கொல்லப்படமாட்டாது என உண வியல் நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

# இலங்கைத் தமிழர் பி[illegible]து பெ.15 இற்குள் தி.மு.க. பொதுக்குழு கூ[illegible]டுக்கும் கருணா[illegible]தி அறிவிப்பு

(சென்னை)

இலங்கைப் பிரச்சினை குறித்து பெப்பரவரி 15ஆம் திகதிக்குள் திமுக பொதுக்குழு கூடி முக்கிய முடிவெடுக்கும் என்று முதல்வர் கருணாநிதி அறிவித்தார்.


சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நேற்று முன்தினம் சங்கத் தமிழ் பேரவை என்ற அமைப்பு நடத்திய பாராட்டு விழாவில் கலந்து கொண்டு அவர் பேசியதாவது,

இந்த விழாவில் என்னைப் பலரும் பாராட்டினார்கள். பொன்னாடைகள் பட்டாடைகள் அணிவித்தார்கள். ஆனால் நான் முழு மகிழ்ச்சி அடையவில்லை.

பக்கத்து நாட்டில் நமது தமிழ் மக்கள் தங்களது தாயகத்தில் வாழ முடியாமல் துரத்தப்படுகிறார்கள் அவர்களின் துன்பத்துக்கு நாம் எப்போது முடிவு கட்டப் போகிறோம்?

அதற்காகத்தான் சட்டப் பேரவையில் மத்திய அரசுக்கு இறுதி வேண்டுகோள் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தோம். இலங்கைப் பிரச்சினையை வைத்து சில அரசியல் ஆதாயம் தேட முயற்சித்து வருகிறார்கள். நாங்கள் இந்தப் பிரச்சினையை அரசியலாக்க விரும்பவில்லை. மத்திய அரசு இப் பிரச்சினையில் தனது கடமையை ஆற்ற வேண்டும்.

கடந்த வெள்ளிக்கிழமை சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் போது தி.மு.க பொதுக்குழு கூடி அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து முடிவெடுக்கும் என்றேன்.



அதன்படி எதிர்வரும் பெப்ரவரி 15ஆம் திகதிக்குள் தி.மு.க பொதுக்குழு கூடி முக்கிய முடிவெடுக்கும் இந்த அறிவிப்பு நான் உங்களுக்கு அளிக்கும் பட்டாடையாகும் என்றார். (6)

# கடத்தப்பட்ட கப்பலிலிருந்து 25 இந்தியர்கள் விடுவிப்பு

(நைரோபி)

சோமாலிய கடற்கொள்ளையர்கள் இரண்டு மாதங்களுக்கு முன் கடத்திச் சென்ற லைபீரியா எண்ணெய்க் கப்பலை விடுவித்துள்ளனர்.

இதில் இருந்த இந்தியாவைச் சேர்ந்த 25 கப்பல் ஊழியர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர். கடந்த நவம்பர் மாதம் லைபீரியா நாட்டைச் சேர்ந்த எண்ணெய்க் கப்பலை சோமாலிய கடற்கொள்ளையர்கள் கடத்தினர்.

இதில் இருந்த இந்தியாவைச் சேர்ந்த கப்பல் ஊழியர்கள் 25 பேரும் வங்களா தேசத்தைச் சேர்ந்த மூன்று பேரும் கடத்தப்பட்டனர். கப்பலை விடுவிப்பது குறித்து கப்பல் நிறுவனத்துக்கும் கடற்கொள்ளையர்களுக்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டது. இதையடுத்து கப்பலையும் அதில் இருந்த ஊழியர்களையும் கொள்ளையர்கள் விடுவித்தனர். (6)

# பங்களாதேஷ்க்கு படை[illegible] அனுப்பிய இந்தியாவால் இலங்கைக்[illegible] கொடுக்க முடியாதா

# டில்லி மா[illegible]வர்கள் கேள்வி


(சென்னை)

இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி தமிழகத்தில் பல்வேறு கல்லூரி மாணவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் டில்லியில் உள்ள ஜாமியா மில்லியா இஸ்லாமியா டில்லி பல்கலைக் கழகம் ஜவஹர்லால் நேரு பல் கலைக்கழகம் ஆகியனவற்றில் பணியாற்றும் தமிழ் பேராசிரியர்கள் மற்றும் தமிழ் மாணவர்கள் நேற்று முன்தினம் உண்ணாநிலை போராட்டம் நடத்தினர்.

இலங்கை பிரச்சினைக்கு தீர்வு காண வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியை கொழும்புக்கு அனுப்பி வைக்கும் கோரிக்கையை மத்திய அரசு கண்டு கொள்ளவில்லை என்று தமிழ் பேராசிரியை விஜயலட்சுமி தெரிவித்துள்ளார்.

உண்ணா நிலை போராட்டத்தில் பங்கேற்ற மாணவர்கள் இலங்கை உள்நாட்டு விவகாரத்தில் இந்தியாவால் நிர்பந்தம் கொடுக்க முடியாது என்று கூறும் மத்திய அரசு பங்களாதேஷக்கு மட்டும் இராணுவத்தை அனுப்பி விடுதலை வாங்கிக் கொடுத்தது ஏன் என்று கேள்வி எழுப்பினர். (6)




# இலங்கைக்கு கடத்தவிருந்த ரூ.1.5 கோடி ஹெரோயின் பறிமுதல்

(சென்னை)

இலங்கை நபர் ஒருவரிடம் இருந்து 1.5 கோடி ரூபாய் மதிப்புள்ள ஒன்றரை கிலோ ஹெரோயின் போதைப் பொருளை சென்னை விமான நிலைய சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

சென்னையில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு 10.30 மணிக்கு கொழும்பு புறப்பட இருந்த இலங்கை விமானப் பயணிகளை விமான நிலைய சுங்க அதிகாரிகள் கண்காணித்து வந்தனர்.

இந்த விமானத்தில் பயணம் செய்வதற்காக 147 பயணிகள் அனைத்து சோதனைகளையும் முடித்து விமானத்தில் ஏறத் தயாராக இருந்த நிலையில் சுங்க அதிகாரிகளுக்கு ஒரு ரகசிய தகவல் வந்தது.

அதில் கொழும்பு செல்லும் பயணி ஒருவர் ஏராளமான அளவில் போதைப் பொருளை கடத்திச் செல்வதாகக் குறிப்பிடப்பட்டது.

இதையடுத்து சோதனை முடித்த அனைத்து கொழும்பு பயணிகளையும் சுங்க அதிகாரிகள் மறு சோதனைக்குட்படுத்தினர். பயணிகளில் ஒருவரான இலங்கை வவுனியாவைச் சேர்ந்த பாலதீபன் என்பவரிடமிருந்து ஒன்றரை கிலோ பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். (6)

# டில்லியிலுள்ள உயர் அதிகாரிகள் குழு பிரதமரை தவறாக வழி ந[illegible]

# பழ.நெடுமாறன் [illegible]

(கடலூர்)

இலங்கைப் பிரச்சினையில் தமிழர்களுக்கு உரிய நியாயம் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதை விட்டு விட்டு தவறான வகையில் பிரதமருக்கு வழிகாட்டுகின்றனர் உயர் அதிகாரிகள் என்று தமிழ் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் குற்றஞ் சாட்டினார்.



கடலூரில் நேற்று முன்தினம் அவர் கூறியதாவது,

ராஜீவ் காந்தியின் கொலைக்கு பழிக்குப் பழி வாங்கவே இலங்கை இராணுவத்துக்கு இந்திய அரசு உதவி செய்கிறது என்று நான் நினைக்கவில்லை.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் டில்லியில் உள்ள உயர் அதிகாரிகள் குழு பிரதமரைத் தவறாக வழி நடத்துகிறது.

சிவ்சங்கர மேனனும் எம்.கே. நாராயணும் இக்குழுவில் உள்ளனர். இவர்கள் தொலை நோக்குப் பார்வை அற்றவர்கள். இவர்கள் [illegible] கேடு விளை[illegible] காங்கிரஸ்[illegible] அடக்க முடியா[illegible] லும் அடக்கி வைப்பார்கள்.

பா.ஜ.க. அல்லது வேறு கட்சிகள் ஆட்சிக்கு வந்தாலும் இந்த அளவுக்கு மோசமாக இருக்காது காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருக்கும் வரை ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காது.

ஈழத் தமிழர்கள் மீது வான்வழித் தாக்குதல் மற்றும் தரைவழித்தாக்குதலில் இந்திய அதிகாரிகள் இலங்கை இராணுவத்தை வழி நடத்துகிறார்கள்.

இந்திய அரசு அனுப்பிய உதவிகள் முழுமையாகச் சென்றடையவில்லை. உண்மையில் இந்திய அரசு உதவுவதாக இருந்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விமானம் மூலம் உணவு மற்றும் மருந்துப் பொருள்களைக் கொண்டு சென்று போடவேண்டும்.

சட்டப் பேரவை தீர்மானம் நிறைவேற்றியும் மத்திய அரசு மதிக்கவில்லை எனவே முதல்வர் அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி அடுத்த நடவடிக்கையை அறிவித்திருக்க வேண்டும்.

இதை கட்சி அரசியல் ஆக்கி போகாத ஊருக்குப் புரியாத வழிகாட்டுகிறார். கருணாநிதி.

மத்திய அரசையும் காங்கிரஸ் கூட்டணியையும் ஈழத் தமிழர்களையும் காப்பாற்ற வேண்டும் என்று நினைக்கிறார் கருணாநிதி.

இலங்கையில் அண்மையில் சுட்டு வீழ்த்தப்பட்ட சிங்கள இராணுவ விமானத்தில் இருந்த இந்திய பாகிஸ்தான் விமானப்படை அதிகாரிகளை விடுதலைப் புலிகள் உயிரோடு பிடித்துள்ளனர். என்றார் நெடுமாறன். (6)

# மாணவர்கள் நடத்தும் போராட்டத்துக்கு அனைவரும் முழு ஆதரவு தர வேண்டும்

# வைகோ வேண்டுகோள்

(சென்னை)

இலங்கைத் தமிழர்களுக்காக தமிழக மாணவர்கள் நடத்தும் போராட்டத்துக்கு அனைவரும் முழு ஆதரவு அளிக்க வேண்டும் என்று மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்தார்.

இது குறித்து அவர் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தியை எதிர்த்து, தமிழின் உரிமை காக்க அண்ணா அழைத்தார். இதனால், கடந்த 1963இல் இருந்தே மொழிப் போராட்டம் தீவிரம் அடைந்தது.

இதில் 1964 ஆம் ஆண்டு சின்னச்சாமி என்பவர் தீக்குளித்து உயிரிழந்தார். இதையடுத்து, தமிழகத்தில் மொழிகாக்கும் உணர்வுடன் பள்ளி, கல்லூரி மாணவர்கள் வகுப்புகளைப் புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

1967 இல் காங்கிரஸ் ஆட்சியை இழந்த பின் தமிழகத்தில் 42 ஆண்டுகள் ஆகியும் அக்கட்சியால் ஆட்சி பீடத்தை நெருங்க முடியவில்லை.

விடுதலைப் போராட்டத்திலும் 1942 இல் சென்னை மாகாணத்திலும் மாணவர்கள் படிப்பைத் துறந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதே போல தற்போது ஈழத்தமிழர்களின் நிலை தமிழக மாணவர்களை இனம் காக்க எழுக என்று அழைக்கிறது. அதனால் தான் இலட்சக்கணக்கான மாணவர்கள் யாருடைய தூண்டுதலும் இன்றி போராட்டத்தில் குதித்துள்ளனர்.

நம்பிக்கை தரும் வெளிச்சமாக மாணவர்களின் போராட்டம் உள்ளது. ஆனால், மாணவர்களை தமிழக அரசு மிரட்டி வருகிறது.

திருச்சி சட்டக் கல்லூரி மாணவர்கள் சசிகுமார் உள்ளிட்ட 5 பேர் இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இது, மாணவர்கள் போராட்டத்தை ஒடுக்கும் செயல், இலங்கையில் தமிழர் பகுதிகளில் குண்டு வீச்சு நிற்கவில்லை. ஏராளமானோர் உயிரிழக்கின்றனர்.

மாணவர்களின் கிளர்ச்சி வலுப்பெறுவதன் மூலம் மத்திய மாநில அரசுகளுக்கு அச்சம் ஏற்படட்டும். இராணுவ ரீதியிலான உதவிகளை நிறுத்தட்டும். இலங்கைக்கு உதவ அனுப்பிய இராணுவ நிபுணர்களை திரும்பப் பெறட்டும்.



இலங்கையில் போர் நிறுத்தம் செய்யுமாறு ஜேர்மனி, ஜப்பான் உள்ளிட்ட பல்வேறு நாடுகள் கூறியும் இந்தியா தடையாக உள்ளது.

போர் நிறுத்தம் செய்யுங்கள் என்று இந்திய அரசு ஒப்புக்குக் கூட சொல்லவில்லை. இதற்கு கருணாநிதி உடந்தையாக உள்ளார்.

முதலில் எம்பிக்கள் ராஜினாமா என்றார். டில்லி போகிறேன் என்று காலத்தைக் கடத்தினார். இதன்பின் பிரணாப் கொழும்புக்கு போகிறார் என்றார்.

இப்போது மக்களை ஏமாற்ற இது இறுதி வேண்டுகோள் என்கிறார் கருணாநிதி இந்நிலையில் மாணவர்கள் நடத்தும் போராட்டத்துக்கு அனைவரும் முழு ஆதரவு தர வேண்டுகிறேன் என்றார் வைகோ. (6)

# இலங்கையில் ஊடகவியலாளர் மீதான வன்முறை குறித்து அமெரிக்கா அதிர்ச்சி

## அமெ.வெளியுறவு திணைக்கள பிரதிப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்படும் தீவிரமான வன்முறைகளையிட்டு புதிய அமெரிக்க அரசாங்கம் பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்காவின் வெளியுறவுத்திணைக்களத்தின் பிரதிப் பேச்சாளர் றொபேர்ட் ஏ வூட் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் ஊடகவியாளர்கள் தொடர்ந்தும் தாக்குதல்களுக்கு உள்ளாகி வருவது குறித்து அமெரிக்கா கவலையடைந்துள்ளது.

இத்தகவல்கள் இலங்கையில் ஊடகத்துறை சுதந்திரமாக செயற்படும் நிலை மோசமடைந்து வருவதையே காட்டுகின்றது.

ஜனநாயகம் தொடர்ந்து பேணப்படுவதற்கு சுதந்திரமானதும் தன்னிச்சையானதுமான ஊடகத்துறை அவசியமானது.

இலங்கை அரசு எல்லா மக்களையும் பாதுகாப்பதுடன், ஊடகவியாலாளர்கள் மீதான வன்முறைகளையும் தடுக்க வேண்டும் என நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

பொதுமக்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாக முழுமையானதும், தரமானதுமான விசாரணைகள் மேற்கொள்ளப் படவேண்டும் என்றார். (6)

# இலங்கைக்கான இராணுவ உதவிகளை இஸ்ரேல் நிறுத்தும் அபாயம்

(கொழும்பு)

இலங்கைக்கு வழங்கி வரும் இராணுவ உதவிகளை இஸ்ரேல் விலக்கிக் கொள்ளலாம் என அச்சம் ஏற்றபட்டுள்ளது.

இஸ்ரேலிய படையினர் காஸா பகுதியில் நடத்திய தாக்குதல் தொடர்பாக இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் பிரதிநிதி தயான் ஜயதிலக தெரிவித்த கருத்துக் காரணமாகவே இந்த அச்சம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தயான் ஜயதிலகவின் கருத்துக்கு தமது எதிர்ப்பை தெரிவிக்கும் முகமாக கடந்த வாரம் இஸ்ரேல் தமது பிரதிநிதி ஒருவரை இலங்கைக்கு அனுப்பியது.

தயான் ஜயதிலக காஸா தாக்குதல்கள் தொடர்பில் இஸ்ரேலிய அரசாங் கத்தை நேரடியாக குற்றம் சுமத்தியிருந்தார்.

இதற்கு புதுடில்லியில் உள்ள இலங்கைக்கன இஸ்ரேலிய தூதர் மார்க் சோபர் கடந்த புதன்கிழமையன்று இலங்கைக்கு வந்து வெளியுறவுத்துறை செயலாளர் பாலித கோஹனவிடம் தமது கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

தமது நாடு ஒரு போதும் இலங்கையிடம் இருந்து இவ்வாறான கருத்தை எதிர்பார்த்திருக்கவில்லை என்றும் அவர் இதன் போது குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தயான் ஜயதிலக இஸ்ரேலுக்கு எதிராக தெரிவித்த கருததுக்கு இலங்கையின் வெளியுறவு அமைச்சிடம் எவ்வித அதிகாரங்களையும் பெற்றிருக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அண்மையில் இஸ்ரேலுடன் ஏற்படுத்திக்கொண்ட படைத் துறை தொடர்புகளுக்கு தயான் ஜயதிலகவின கருத்து பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

காஸா பகுதியில் பொதுமக்கள் கொல்லப்படுவதை பொய்களால் மறைக்க முடியாது என தயான் ஜயதிலக குறிப்பிட்டிருந்தார். (6)

# இலங்கையில் இருந்து மேலும் 4 ஊடகவியலாளர்கள் வெளியேற்றம்

(கொழும்பு)

இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல்களை அடுத்து மேலும் நான்கு ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

அரசாங்கத்தின் உரிமை செய்தி நிறுவனமான லேக் ஹவுஸை சேர்ந்தவர்களும் அரசாங்கத்திற்கு எதிராக பாரிய பிரசாரங்களில் ஈடுபட்டு வருபவர்களுமான சனத் பாலசூரிய, போதல லியனஹே, சுதந்திர ஊடக இயக்கத்தை சேர்ந்த சுனந்த தேசப்பிரிய மற்றும் உவிந்து குருகுலசூரிய ஆகியோரே நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள்.

ஏற்கனவே கடந்த வாரம் லங்காதீபவின் உப்புல் ஜோசப் பெர்ணான்டோ, ரத்னபால கமகே, எம் டி வி நிறுவனத்தின் சீவன் டேனியல், சண்டே டைம்ஸ் ஊடகத்தின் இக்பால் அத்தாஸ், நேசனின் கெய்த் நோயர், இலங்கை இதழியல் கல்லூரியின் நாமல் பெரேரா மற்றும் அநுரத்த ஆகியோரும் வெளியேறி னர்.

சண்டேலீடரின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொல்லப்பட்டமை மற்றும் ரிவிர செய்திதாளின் ஆசரியர் உப்புல் தென்னக்கோன் தாக்கப்பட்டமை ஆகிய சம்பவங்களை அடுத்தே இந்த வெளியேற்றம் நிகழ்ந்துள்ளது.

இதேவேளை கடந்த முதலாம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அரசாங்கத்தின் முதன்மை அமைப்பாளர் தினேஸ் குணவர்த்தன, 2006 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் 9 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும், 27 பேர் தாக்கப்பட்டுள்ளதாகவும் நான்கு ஊடகவியலாளர்கள் கடத்திச் செல்லப்பட்டு அதில் நால்வர் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (6)


# கொழும்பில் நகைப் பட்டறைகளில் வேலை செய்த சிறுவர்கள் மீட்பு

(கொழும்பு)

கொழும்பு செட்டியார் தெருவிலுள்ள நகை பட்டறைகளில் தொழிலுக்கு அமர்த்தப்பட்டிருந்த 14 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் ஒன்பது பேரை கொழும்பு மத்திய குற்றப் புலனாய்வு பிரிவினர் மீட்டுள்ளனர்.

கொழும்பு மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து தொழில் திணைக்கள அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்ட முற்றுகைகளின் போது இந்த சிறுவர்கள் மீட்கப்பட்டனர். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களைச் சேர்ந்த இச் சிறுவர்கள் காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை தொழிலுக்கு அமர்த் தப்பட்டு வந்துள்ளனர். என பொலிஸ்



விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

கொழம்பு மத்திய குற்றப் புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி ஏ.என்.எஸ். ஜயவர் தன தலைமயிலான பொலிஸ் குழுவினர் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (6)

# தந்தை தோமஸ் அடிகளாரின் ஆன்மீக வாழ்வு

## இன்று தோமஸ் அடிகளாரின் விண்ணக வாழ்வின் 45 வது ஆண்டு நினைவு நாள்



பாண்டியன் தாழ்வு என்ற கிராமத்தில் வஸ்தியாம், லூயிஸ் அம்மாள் தம்பதியினருக்கு இரண்டாவது புதல்வராக 7.3.1886இல் தோமஸ் அடிகளார் உதித்தார்.

"அவரது திட்டத்திற்கேற்ப அழைக்கப்பட்டவர்களோடு ஆவியானவர் அவர்கள் நன்மைக்காக அனைத்திலும் உங்களுடன் ஒத்திருக்கின்றார்'' என்ற புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய மடலின்படி தோமஸ் அடிகளாருக்கு பிறந்த நாள் அன்றே வைத்தியர் ஆயுட் காலத்தை குறித்துவிட்டார். அதாவது இந்தக் குழந்தை நீண்ட நாட்கள்இவ்வுலகில் நிலைக்க முடியாது. ஏனெனில் அவர் ஒரே ஒரு சுவாசப்பை உடையவராக காணப்பட்டார்.

இதைத் கேள்விப்பட்ட இவரது பெற்றோர் கதிகலங்கித் தவித்தார்கள். என்ன செய்வது என்று கூடத் தெரியாமல் உடனடியாக இந்தக் குழந்தைக்கு திருமுழுக்குக் கொடுப்போம். என தீர்மானித்து தங்கள் பங்குத் தந்தையை நாடி திருமுழுக்கிற்கான ஆயத்தங்களை மேற்கொண்டனர். அப்போது குருவானவர் இக் குழந்தைக்கு என்ன பெயர் கொடுக்கப் போகின்றீர்கள் எனக் கேட்டார் இதற்கோ பெற்றோரிடம் இருந்து எதுவித பதிலும் கிடைக்கவில்லை. காரணம் குழந்தையின் உயிர் இன்றைக்கோ நாளைக்கோ என ஊசலாடியது.

சிறிது நேரத்தின் பின் தாயார் சிந்தித்து தம் ஊரிற்கு அண்மையில் இருக்கும் பாசையூர் கிராமத்தின் பாதுகாவலராக இருக்கும் அந்தோனியாருடைய பெயரை நினைத்து "அன்தோனி'' எனக் கூறி குழந்தைக்கு "அந்தோனி" எனப் பெயரிட்டனர்.

இவ்வாறாக ஆயுள் குறிக்கப்பட்ட அந்தோனி திருமுழுக்குப் பெற்று பெற்றோரின் கடும் அரவணைப்புடன் வளர்க்கப்பட்டு வந் தார்.

அந்தோனி மெதுமெதுவாக பெற்றோரின் அரவணைப்புடனும் இறைவனது பாதுகாப்புடனும் வளர்ந்து இளமைப்பருவம் அடைந்தான். ஆரம்பக் கல்வியை புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் கற்றார். பின்னர் ஒரு நாள் ஒரு குரு வைச் சந்திக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அப்போது குருவானவர் "தம்பி நீ குருவாகித் திருப்பலி நிறைவேற்றமாட்டாயா?" "நீ கட்டாயம் நல்ல குருவாக வேண்டும் '' என்றார். இதை ஏற்று தலையை அசைத்தான் அந்தோனி.

பின் வீடு சென்று தனது பெற்றோரிடம் இதைப் பற்றி கலந்துரையாடினார். பெற்றோரோ அந்தோனி குருவாக வருவதற்கு இணக்கவில்லை. "தம்பி நீ குருவாகப் போகிறாயா? பிறந்த அன்றே பரலோகம் சேர வேண்டிய நீ! சரியாகக் கால்களை வைத்து நிமிர்ந்து நடக்க முடியாத நீ! குருமடம் செல்கிறாய்? "ஏன் ஏளனச் சிரிப்புடன் பேசினர். அந்தோனியுடன் கூடவே நடந்த தோழனாக அமைந்தது நோய்தான். மேலும் தனது 26ஆம் வயதில் குருத்துவத்தில் இணையும் முன் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் "நோயிற் பூசுதல் '' எனும் அருட்சாதனம் பெற்றிருந்தார்.

ஒரு சில நாட்களுக்கு பின்னர் அந்தோனியின் பெற்றோர் , "மகனே நீ குருவாக வரவேண்டும் என நாங்கள் ஆசைப்படுகின்றோம் என்று கூறினர். காரணம் அந்தோனி வாழ்வது சிறிது காலம். அக்காலத்தினை இறைவனுக்கு ஒப்படைக்க வேண்டும் என்பதற்காகவே. உடனே அந்தோனி சம்மதம் கொண்டு புனித மாட்டீனார் குருமடத்தில் தனது 19ஆம் வயதில் (1905இல்) இணைந்து குருமடக் கல்வியைப் பயின்றார்.

பின்னர் மேற்குருத்துவ கல்விக்காக அமலமரித்தியாகிகளின் புனித அலோசியஸ் நவத்துறவு இல்லம் கொழும்பில் உள்ள சிலேவ் ஐலண்ட்டுக்குச் சென்றார். அங்கு அவரோடு கூடவே சமமாக இறையியல் பயில இன்னுமொரு சகோதரன் இருந்தான் அவனது பெயர் அந்தோனி .எனவே அந்தோனி என்று கூப்பிட்டால் யார் போவது என்பது தெரியாமல் இருவரும் திகைப்பர்.

எனவே மேற்குருத்துவக் கல்வி பயிலச் சென்ற அந்தோனிக்கு "தோமஸ் '' என குருவானவர் பெயர் சூட்டினார் அன்றிலிருந்தே அந்தோனி தோமஸ் ஆக மாறிவிட்டார். இவ்வாறு இவர் தோமஸாக மாறி குருத்துவக் கல்வியில் அதிக மதிப்பெண்களைப் பெற்று முதன் மாணவனாக திகழ்ந்தார்.

தந்தை தோமஸ் அவர்களின் குருத்துவக் கல்வி நிறைவு படுத்தப்பட்டு ஆயர் கிலோமர் என்பரவால் 06.01.1912இல் குருத்துவ திருநிலைப் படுத்தப்பட்டு இறைபணி புரிந்து வந்தார். 5 வருடங்களுக்கு மேல் சீவிக்க மாட் டார் எனக் கூறப்பட்டவர் திரு நிலைப்படுத்தப்பட்ட பின் 50 வருடங்கள் வாழ்ந்தார். பின் புனித பத்திரிசிரியார் கல்லூரியில் இந்து மாணவர்கள் விடுதிக்கு முதல்வராக பணியாற்றினார். பின்னர் ஆயர் சந்தியோகு என்பவருக்கு துணையாக பணி புரிந்தார். அத்தோடு தோலகட்டியில் உள்ள ஒரு குருமனை அவருக்கு வழங்கப்பட்டது. அங்கு அவர் 1926இல் பாப்பிறை xi பத்திநாதரின் Rerum Eccle sia என்னும் சுற்றுமடலில் திருச்சபைக்கு காட்சித் தியான வாழ்வின் அவசியத்தை உணர்த்தப்பட்டது.

இதற்கு அமைவாக செபமாலை தாசர் சபையினை 1928ல் மாசி 2ஆம் திகதி 6 வாலிபர்களுடன் ஆரம்பித்தார். பின் செபமாலை தாசர் சபை படிப்படியாக முன்னேற்றம் அடைந்துவர அரும்பாடுபட்டு உழைத்து வந்தார். இவ்வாறாக தனது வாழ்வின் ஒரு புரட்சியைக் கண்ட அவர் காட்சித் தியான வாழ்வை முன் நோக்கமாகக் கொண்டு "தாழ்ச்சி '' என்ற புண்ணியத்தை புரட்டினார் இவ்வாறான சாகசங்களைச் செய்த குருவே அருட்தந்தை தோமஸ் அ.ம.தி. இவ்வாறு பல்வேறு வகையாக இறைவனால் வழிநடத்தப்பட்டு இறைபணி புரிந்த தோமஸ் அ.ம.தி "கோதுமைமணி மண்ணில் வீழ்ந்து மடிந்தாலொழிய அது அப்படியே இருக்கும் மடிந்தால் மட்டுமே அது பயன் தரும் '' (அரு 12:24) என்ற இறைவார்த்தைப் பகுதிக்கு அமைய 1964.1.26ஆம் திகதி இறைவன் பாதம் சென்றார் பிறந்து குறுகிய காலமே வாழ்வார் எனக் கூறப்பட்ட இவர் சுமார் 78 வருடங்கள் இறைபணி புரிந்து புனிதத்துவ வாழ்வு வாழ்ந்தார். அருள் திரு தோமஸ் அ.ம.தி. அடிகளாரால் உருவாகியதே செபமாலை தாசர் சபை.

செபமாலை தாசர்சபை யானது கிளை விட்டு இந்தியாவில் 7 மறை மாவட்டங்களிலும் இலங்கையில் நான்கு மறை மாவட்டங்களிலும் 13 இல்லங்களுமாக அத்துடன் செபமாலைக் கன்னியருக்கு என்று இலங்கையிலும் இந்தியாவிலும் 11 இல்லங்களுமாக காணப்படுகின்றது. இவ்வாறாக செபமாலை தாசர் சபையானது இன்று இறைவனால் ஆசீர்வதிக்கப்பட காரணமாய் இருந்தவர் எமது ஸ்தாபகர். அருட்தந்தை தோமஸ் அ.ம.தி. ஆவார். இவரது புனிதப் பட்டத்திற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கும் வேளையில் இறை மக்களாகிய நாம் அவரது புனிதப் பட்ட முயற்சி வெற்றியாக்கவும் செபமாலைதாசர் சபைக்கு ஓர் புனிதரைத் தரவேண்டுமென்று தினந்தோறும் ஜெபிப்போம். இத்தோடு "கடவுளுக்கு நிகர் யார் என்ற தோமஸ் அ.ம.தி யின் வினா வாக்கை எம் வாழ்வில் கொண்டு இறைவனுக்கு ஊழியம் புரிந்து ஆன்மாவைத் தூய்மைப்படுத்துவோம்.

ஜி.நிமல்ஜன்
அருள் ஆச்சிரமம்,யாழ்ப்பாணம்

தனக்கொன்றும் தெரியாவிட்டாலும் எல்லாம் அறிந்தவன் போல நடிப்பவன் தான் அரசியல்வாதி.
– *பெர்னாட்ஷா*

வலம்புரி

## மன்மோகன் சிங்கின் உடல்நிலை கூட யுத்த நிறுத்தத்தைத் தீர்மானிக்கிறது

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சத்திரசிகிச்சைக்கு உட்பட்டுள்ள பிரதமர் மன்மோகன் சிங் உடல்நிலை தேறிவருவதற்கு சில காலம் ஆகலாம்.

அவரின் உடல்நிலை தேறும்வரை இலங்கையில் யுத்த நிறுத்தம் என்பது சாத்தியமாகாதென்பது தெரிந்த விடயம்.

ஆக,பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அறுவைச் சிகிச்சை மேற்கொண்டது கூட, ஈழத் தமிழருக்குக் கஷ்டகாலமாகவே முடிகிறது.

இவை யாவற்றுக்கும் மேலாக, இந்தியா பொதுத் தேர்தலை சந்திக்கவுள்ள நிலைமையும், தமிழக முதல்வர் கருணாநிதியின் கோரிக்கை மத்திய அரசில் அரங்கேறாமல் போனமைக்குக் காரணமெனலாம்.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சி அமைப்பதற்குத் தி.மு.கவின் ஆதரவு பெருந் துணையாக இருந்தது.

ஆனால் இப்போது பொதுத் தேர்தல் அண்மித்திருப்பதால், காங்கிரஸ் கட்சி கருணாநிதிக்கு உரிய மதிப்பைக் கொடுக்கத் தவறிவிட்டது.

அதே சமயம் கருணாநிதியும் மத்தியில் தனக்கு இருக்கக் கூடிய கௌரவத்தை பயன்படுத்த வேண்டிய காலத்தையும் தவறவிட்டுவிட்டார்.

தி.மு.கவின் அடுத்த வாரிசாகத் தனது பிள்ளைகளைக் கொண்டுவருவதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தியமையால் ஈழத்தமிழர் விடயம் கருணாநிதிக்குத் தெரியாமல் போய் விட்டது.

தற்போது இலங்கையில் நடைபெறும் போரை நிறுத்த முற்படுகின்றபோதுதான் காங்கிரஸ் தன்னை ஏமாற்றிவிட்டதை கருணாநிதியால் புரிய முடிந்தது.

இலங்கைப் பிரச்சினை நிச்சயம் காங்கிரஸுக்கும், தி.மு.கவுக்கும் இடையிலான தேர்தல் உறவைச் சீர்குலைக்கும் என்பதை உறுதியாகக் கூறலாம்.

இலங்கைப் பிரச்சினை காங்கிரஸ் –தி.மு.க உறவைக் குலைக்கும் என்று கூறுவதிலும் பார்க்க எதிர்வரும் பொதுத் தேர்தலில் தி.மு.கவுடன் உறவை வைக்க காங்கிரஸ் விரும்பவில்லை என்று கூறுவதே பொருத்துடையதாகும்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் செல்வி ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.கவுடன் தேர்தல் கூட்டை வைத்துக் கொள்ளவே காங்கிரஸ் விரும்புகிறது.

எனவே பிரதமர் மன்மோகன் சிங்கின் உடல்நிலை தேறி, அவர் தனது வழமையான கடமையில் ஈடுபட்டாலும், இலங்கையில் யுத்த நிறுத்தம் செய்யப்படும் என்பதற்கான உத்தரவாதங்கள் எதுவும் கிடையாது.

அப்படியானால் இலங்கை இனப்பிரச்சினை எவ்வாறு தீரும்?

அதனைத் தீர்த்து வைக்க யார் முன்வருவர் என்றொரு கேள்வியை எழுப்பினால் அதற்கான விடை, இறைவன் ஒருவனால் மட்டுமே இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடியும் என்பதையே பதிலாகக் கூற வேண்டும்.

தந்தை செல்வநாயகம் அன்று கூறிய வார்த்தைகள் நிஜமாகுவதற்காக இறைவனைப் பிரார்த்திப்பதைத் தவிர வேறு எந்த வழியும் எமக்குத் தெரியவில்லை.

## கோத்தபாய,சரத்பொன்சேகா ஆகியோருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்ய அமெரிக்க சட்டத்தரணி நடவடிக்கை

இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோருக்கு எதிராக இன அழிப்பு குற்றச்சாட்டு பத்திரத்தை தாக்கல் செய்யவுள்ளதாக அமெரிக்க சட்டத்தரணி புரூஸ் பெய்ன் தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமெரிக்க பிரஜையான கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் அமெரிக்காவில் நிரந்தரமாக வசிப்பதற்கான அனுமதியை பெற்றுள்ள லெப் ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோருக்கு எதிராக அமெரிக்க தண்டனை சட்டக்கோவையின் 1091 ஆம் பிரிவின் கீழ் இன அழிப்பு குற்றம் தொடர்பான 1000 பக்கங்களைக் கொண்ட மாதிரி குற்றப்பத்திரமொன்றை தயாரித்துள்ளதாகவும் அதை இருவாரங்களுக்குள் வெளியிடுவதுடன் அமெரிக்க நாடாளுமன்றம் நீதிமற்றும் வெளிவிவகாரத் திணைக்களங்கள் ஆகியவற்றிடம் கையளிக்கவுள்ளதாகவும் புரூஸ் பெய்ன் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

2005ஆம் நவம்பர் மாத்திலிருந்து சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் தொடர்பான மூவாயிரம் சம்பவங்களும் இதற்குச் சமமான எண்ணிக்கையான காணாமல் போதல் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. அது நாளொன்றுக்கு ஏறத்தாழ 3 கொலைகள் மற்றும் மூன்று காணாமல் போதல் சம்பவங்கள் விகிதமாகும்.

அரசாங்கம் இது குறித்து விசாரிப்பதற்காக ஆணைக் குழுக்களை நியமித்துள்ளது. ஆனால் அது ஏமாற்று நடவடிக்கை தமிழர்களுக்கு அழிவை ஏற்படுத்தும் நோக்குடனான நடவடிக்கைகளால் ஒரு மில்லியன் தமிழர்கள் பட்டினி, மருந் துகளின்மை, இடப்பெயர்வு என்பன வற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சொந்த நாட்டு மக்களுக்கான உணவை நிராகரிக்கும் அரிதான நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். மருந்துகள் காலாவதியானவையாக இருப்பதுடன் மாட்டு வண்டில்கள் அம்புலன்ஸ்களாக பயன்படுத்தபடுகின்றன. அங்குள்ள நிலைமை கற்காலத்திற்கு ஒப்பானவையாகும்.

தமிழர் பிரதேசங்களில் 189 இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு இலங்கை இராணுவத்தின் அனுமதியின்றி ஒரு விரலைக்கூட அசைக்க முடியாது ஆயுதப் படைகளின் அக்கிரமங்கள் சர்வதேசத்தின் முன் வெளிச்சமாகும் என்பதால் வடக்கு கிழக்கு பகுதிகளில் தொலைக்காட்சி அலைவரிசைகள் காலூன்ற அனுமதிக்கப்படுவதில்லை.

இலங்கை அரசாங்கம் இன அழிப்பு நடவடிக்கைக்கு சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தை பெறுவதற்காக பயங்கரவாத நடவடிக்கை என முத்திரை குத்துகிறது.

இது இரு இனங்களுக்கிடையிலான யுத்தம் அல்ல. மாறாக அப்பாவி தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட இன அழிப்பாகும். நாம் உலகின் கவனத்தை யுத்தத்தினால் தினமும் பலியாகும் அப்பாவிகளின் பக்கம் திருப்பவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

தாம் இலங்கைத் தமிழர் விவகாரத்தை கையாள்வதற்கு அமெரிக்காவிலுள்ள அரசியல் வாதிகளின் ஆதரவை பெற்றுக் கொள்வது கடினம் என்பதை ஏற்றுக்கொண்டுள்ள புரூஸ் பெய்ன் அமெரிக்க ஊடகங்கள் தனக்கு உதவும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் முன்னாள் பிரதி உதவி சட்டமா அதிபரான புரூஸ்பெய்ன் இன அழிப்புக்கு எதிரான தமிழர் குழுவின் ஆலோசகராகவும் செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (6)

## தமிழ் மக்களின் நலனுக்காகவே கூட்டமைப்பு குரல் கொடுக்கின்றது

### இரா.சம்பந்தன் 'லங்கா தீப'வுக்குப் பேட்டி

விடுதலைப்புலிகள் யுத்தம் செய்யவில்லை. அரசாங்கம் தான் யுத்தம் புரிகிறது. யுத்தம் செய்யும் தேவை புலிகளுக்கு இல்லை. தமிழ் மக்கள் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண புலிகள் தயாராக இருந்தார்கள். ஆனால் அவர்களை யுத்தத்துக்கு வலிந்து அழைத்தது இன்றைய அரசாங்கமே என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தன் ஞாயிறு லங்கா தீப பத்திரிகைக்கு வழங்கியுள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப் பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாங்கள் ஓர் அரசியல் கட்சியின் பிரதிநிதிகள். தமிழ்மக்களுக்காகவே நாம் செயற்படுகிறோம். இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்ற வகையில் இங்கும் அரசீயல் சுதந்திரம் இருக்க வேண்டும். நாங்கள் பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்புள்ளவர்கள் என யாராவது நினைத்தால் அது தவறானது.

எமக்குப் பிரபாகரனோ,தமிழீழ விடுதலைப் புலிகளோ முக்கியமல்ல. எம்மை நாடாளுமன்றத்துக்கு அனுப்பியவர்கள் தமிழ் மக்கள். நாம் அவர்களின் நலனுக்காகவே குரல் கொடுக்கிறோம். தமிழர் தொடர்பான நலன்களை நாம் பேணுவதன் காரணமாக மட்டுமே தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தோம். இந்தத் தொடர்பு கூட தமிழ் மக்கள் நலனைக் கருத்தில் கொண்டதாகவே இருந்தது. இது தவிர நாம் பயணிப்பது ஜனநாயக வழியிலேயே.

தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்தம் செய்யவில்லை. அரசாங்கம்தான் யுத்தம் புரிகிறது. யுத்தம் செய்யும் தேவை புலிகளுக்கு இல்லை. தமிழ் மக்கள் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண புலிகள் தயாராக இருந்தார்கள். ஆனால் அவர்களை யுத்தத்துக்கு வலிந்து அழைத்தது இன்றைய அரசாங்கமே. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (ச–5)

## சர்வதேச ஒப்பந்தங்களுக்கு அமைவாக நாட்டின் கடல் எல்லையில் மாற்றங்கள் ஏற்படும்

### அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

இந்திய, சர்வதேச ஒப்பந்தங்களுக்கு அமைவாக நாட்டிற்கு சொந்தமான கடல் எல்லையில் மாற்றங்கள் ஏற்படும் என்பதுடன் வடக்கு கடல் எல்லை தொடர்பாக சார்க் மாநாட்டில் ஏதேனும் தீர்மானம் எட்டப்படவில்லை என்றும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இலங்கை வட கடல் வலயத்தில் கடற்கரையிலிருந்து 200 கடல் மைல் தூரம் எமது நாட்டுக்கு சொந்தமானதாகும்.

இதில் பருத்தித்துறையிலிருந்து கிழக்காக 16 கடல் மைலும் காங்கேசன் துறையிலிருந்து கிழக்காக 15 கடல் மைலும் திருகோணமலையிலிருந்து கிழக்காக 122 கடல் மைலும் முல்லைத்தீவிலிருந்து கிழக்காக 28 கடல் மைலும் உள்ளடங்குகின்றது.

இந்திய சர்வதேச ஒப்பந்தங்களுக்கு அமைவாக எல்லைகளில் மாற்றங்கள் ஏற்படும் எனினும் வடக்கு கடல் எல்லை தொடர்பில் சார்க் மாநாட்டில் ஏதேனும் தீர்மனம் எட்டப்படவில்லை என்றும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன பதிலளித்தார். (6)

## உதவி வழங்கும் நாடுகளின் பின்வாங்கலுக்கு அரசின் மனித உரிமை மீறல்களே காரணம்

### எஸ்.பி. திஸாநாயக்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் மேற்கொண்டு வருகின்ற மனித உரிமை மீறல் மற்றும் நேர்மையற்ற அரசாட்சி காரணமாக இலங்கை அபிவிருத்திக்கு உதவி வழங்கக்கூடிய நாடுகள் பின்வாங்கியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய இணைப்பாளர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரை யாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கம் 107 உறுப்பினர்களை வைத்து நாடகம் ஒன்றினை நடாத்தி சர்வதேசத்தினை ஏமாற்றுவதாக அவர் குற்றம் சாட்டினார். இதன் காரணமாக நாட்டில் இயங்கிவந்த பல தொண்டு நிறுவனங்கள் நாட்டை விட்டு வெளியேறியதாக சுட்டிக்காட்டிய அவர் இந்த நிலையினை மாற்றும் முகமாக எதிர்வரும் மத்தியமாகாண மற்றும் வடமேல் மாகாண சபைத் தேர்தல்கள் அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6–14)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

### நீதி நெறிக் கோட்பாடுகள் என்றால் என்ன?



பல்வேறு வகையான நீதிநெறிக் கோட்பாடுகளுள் பல்வேறு விதங்களில் வெளிப்பட்டு நிற்கின்ற ஒரு கருத்து உள்ளது. அது மற்றவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பது தான். மனிதர்களிடம் அன்பாய் இருப்பது , எல்லா பிராணிகளிடமும் அன்பாக இருப்பது இது தான் மனித குலத்தை முக்கியமாக வழி நடத்தும் குறிக்கோளாக இருக்க வேண்டும். இதெல்லாமே, **நான் தான் பிரபஞ்சம்**; இந்த பிரபஞ்சம் இரண்டற்றது; ஒன்றே தான், என்ற நிலையான உண்மையின் பல்வேறு வெளிப்பாடுகள். அப்படி இல்லா விட்டால் இந்தச் செயல்களுகெல்லாம் காரணம் என்ன? நான் எதற்காக என்னைச் சுற்றி இருப்பவர்களிடம் அன்பு பாராட்ட வேண்டும்? ஏன் மற்றவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும்? என்னைக் கட்டாயப்படுத்துவது எது? அது தான் இரக்கம்; எங்கும் ஒரே பொருள் உள்ளது என்ற உணர்ச்சி.

# மாயைக்குள் மூழ்கியுள்ள அனைத்துலகமும் வன்னியில் தோன்றியுள்ள மனித அவலங்களும்

போரில் வெற்றி தோல்வி என்பது என்ன? ஒரு தரப்பின் பேரழிவு மறு தரப்பின் வெற்றியாக கொள்ளப்படுவதே போரியலின் வெற்றி தோல்விக்கான கருதுகோள். உதாரணமாக 1954ஆம் ஆண்டு வியட்னாமில் தியான் பியன் பூ பகுதியில் பிரான்ஸ் படைகள் சந்தித்த பேரழிவை குறிப்பிடலாம். இந்த சமரில் பிரான்ஸில் இராணுவத்தில் 7ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதுடன் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சரணடைந்திருந்தனர்.



ரிவிர பத்திரிகையின் பிரதம ஆசிரியர் உபாலி தென்னக்கோன் வெள்ளியன்று காலை இனத்தெரியாதோரால் தாக்கப்பட்ட பின் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்படுகின்றார்.

ஆனால் தற்போது தென்னிலங்கையில் மட்டுமல்ல அனைத்துலகத்திலும் வன்னிப் படை நடவடிக்கையின் வெற்றி தோல்விகள் தொடர்பான கருத்துக்களை கூறுவதற்கு படைத்துறை வல்லுநர்கள், அரசியல் தலைவர்கள், என மிகவும் பெரியதொரு கூட்டம் அலை மோதுகின்றது. எதன் அடிப்படையில் இந்தக் கூட்டம் அலை மோதுகின்றது.

படைத்துறை ரீதியாக விடுதலைப்புலிகள் பேரழிவை சந்தித்துள்ளார்கள் என்று இவர்கள் நம்பியுள்ளார்களா? அதற்காக முன்வைக்கப்பட்ட சான்றுகள் என்ன? என்பவை தான் இவர்களின் கருத்துகளை பார்க்கும் போது ஒவ்வொரு மனங்களிலும் எழும் மில்லியன் டொலர் கேள்விகள்.

உலகின் விடுதலைப்போராட்ட வரலாறுகளை நாம் கருத்தில் எடுத்தால் அவர்களின் பிரதான நிலையிடங்களும் தளங்களும் அடிக்கடி இடம் மாறியிருந்ததை நாம் காணலாம். பண்டைய காலத்தில் நிலப் பரப்பை கைப்பற்றுவது அரசர்களின் வெற்றியாக கருதப்பட்டது. ஆனால் அதே நிலப் பரப்புகள் மீண்டும் அதற்கு உரிமை உடையவர்களால் கைப்பற்றப்பட்ட போது ஏற்பட்ட பேரழிவுகளில் இருந்து தான் மெல்ல மெல்ல நவீன போரியல் உத்திகள் உருவாகியிருந்தன.

நவீன போரியல் தத்துவங்களில் நிலப் பரப்புக்களின் நீள அகலத்திலோ அல்லது ஆட்பல அதிகரிப்புக்களிலோ போரின் நகர்வு அதிகம் தங்கியிருப்பதில்லை அதற்கு அப்பால் போரின் நகர்வுத்திறனை தீர்மானிக்கும் காரணிகளாக நவீன ஆயுதங்களும் அதற்கு ஏற்ற களமுனைகளும் போரியல் உத்திகளுமே அங்கம் வகிக்கின்றன.

இலங்கை இராணுவத்தின் ஆட் தொகையையும் ஆயுத வளங்களையும் கருத்தில் எடுத்தால் விடுதலைப்புலிகளின் ஆட்பலமும் ஆயுத பலமும் குறைவானவை எனவே அவர்கள் படைவலுச்சமநிலையை எட்டுவது என்பது கொள்கை ரீதியாக சாத்தியமற்ற ஒன்றாகவே முன்னர் பலருக்கும் தோன்றியிருந்தது. ஆனால் 2001 ஆம் ஆண்டு தீச்சுவாலை நடவடிக்கையின் தோல்வியுடன் ஒரு படை வலு சமநிலை ஏற்பட்டது எவ்வாறு?

படை வளங்களுக்கு அப்பால் போரியல் உத்திகள் படை·வலுச்சமநிலையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை சீர் செய்து விடுகின்றன. உதாரணமாக ஏறத்தாழ 54 இலட்சம் யூத மக்களை கொண்ட இஸ்ரேல் எவ்வாறு பல கோடி மக்களை கொண்ட அரபு நாடுகளின் மத்தியில் வலுவுள்ளாதாக திகழ்கின்றது? நவீன ஆயுதங்களும் நுட்பமான போரியல் உத்திகளும் தான் அதற்குக் காரணம்.

பாரிய படை வளத்துடன் இராணுவம் முல்லைத்தீவை நோக்கிய முற்றுகையை தீவிரமாக்கி வருகையில் கடற்படையினரும் முல்லைத்தீவில் இருந்து சுண்டிக்குளம் வரையிலான 20 கடல்மைல் நீளமான கடற்பரப்பில் 25க்கும் மேற்பட்ட கடற்படை கப்பல்களை நிறுத்தியுள்ளனர். இந்தப் படகு தொகுதியில் அதிகவேக டோராப்படகுகள் ஆழ்கடல் ரோந்துக் கப்பல்கள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் சிறப்புக் கடற் தாக்குதல் பிரிவு (Special Boat Squadron) விரைவு நடவடிக்கைப் பிரிவு (Rapid ActionSquadron) போன்ற கடற்படை அணிகளும் அங்கு நகர்த்தப்பட்டுள்ளதாக கடற்படை பேச்சாளர் கப்டன் டி.கே.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார். இலங்கையின் கடற்படை வரலாற்றில் இது மிகப் பெரும் சுற்றிவளைப்பாகும் எனவும் இதற்கு வடபிராந்திய மற்றும் கிழக்குப்பிராந்திய கடற்படை வளங்கள் அனைத்தும் பயன் படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனினும் கடற்படையினரின் இந்த வியூகத்தின் மீது கடற்புலிகள் கடந்த திங்கட்கிழமை மேற்கொண்ட தாக்குதலில் ஒரு டோரா படகு மூழ்கடிக்கப்பட்டதுடன் அதில் இருந்த 15 கடற்படையினர் கொல்லப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். விடுதலைப்புலிகளின் நான்கு தாக்குதல் படகுகளை தாம் எதிர் கொண்டதாகவும் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற மோதல்களில் தமது அதி வேகத்தாக்குதல் படகு ஒன்று கடுமையாக சேதமடைந்ததாகவும் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. வெடிமருந்து நிரப்பப்பட்ட விடுதலைப் புலிகளின் தாக்குதல் படகு டோரா படகிற்கு அருகில் வெடித்ததாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

மேலும் கடந்த வாரம் வெள்ளிக்கிழமை (16) ஏ-9 பாதையின் இரணைமடுப்பகுதிக்கு கிழக்காக 6 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள தர்மபுரம் பகுதிக்கு நகர்ந்த 57-1 மற்றும் 57-2 ஆவது பிரிகேட்டுக்களை சேர்ந்த இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் இடம் பெற்றுள்ளது. இதன் போது 51 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக தமிழ்நெற் இணையத்தளம் செய்தி வெளியிட்டது. எனினும் 20 புலிகளும் 7 படையினரும் கொல்லப்பட்டதாக இராணுவ பேச்சாளர் தெரிவித்திருந்தார்.

இந்த நடவடிக்கைக்கு 57 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் சிறப்பு கொமாண்டோப் படையினரை பயன்படுத்தியிருந்தார். இந்த நடவடிக்கையின் போது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலானது படைத்தரப்புக்கு மற்றுமொரு அதிர்ச்சியையும் கொடுத்துள்ளது.

அதாவது கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் இரணைமடு பகுதியில் மேற்கொண்ட தாக்குதலின் போது ரீ 55 ரக டாங்கியை பயன்படுத்தியிருந்த விடு தலைப் புலிகள் தற்போது ரீ 86 ரக கவசத்தாக்குதல் வாகனத்தை( Armoured Fighting Vehicle) பயன்படுத்தியுள்ளனர் இந்த வாகனமானது துருப்புக்காவியாகவும் பயன்படுத்தப்படமுடியும் (8 பேர் பயணம் செய்ய முடியும்) சோவியத்தின் BMP-1 கவசத் தாக்குதல் வாகனத்தின் பிரதி வடிவமான இந்த வாகனம் சீன நாட்டு தயாரிப்பாகும். விடுதலைப்புலிகளை பொறுத்தவரையில் இதுவரை காலமும் பீரங்கி மற்றும் மோட்டார் படையணிகளின் வளர்ச்சியில் இராணுவத்தின் தாக்குதலுக்கு நிகரான வளர்ச்சியை கண்டிருந்ததுடன் அது படைத்தரப்புக்கு பாரிய பின்னடைவுகளை கொடுத்ததுடன் களமுனை மாற்றங்களையும் ஏற்படுத்தியிருந்தது.

தற்போது இராணுவத்தின் கவசத் தாக்குதல் படையணி பயன்படுத்தும் டாங்கிகளையும் கவசத்தாக்குதல் வாகனங்களையும் ஒத்த கனரக வாகனங்களை விடுதலைப் புலிகள் பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர். இதையடுத்து விடுதலைப்புலிகள் கவசத் தாக்குதல் படையணியை உருவாக்கி விட்டனர். என்ற தகவலை இந்த தாக்குதலின் பின்னர் கொழும்பு ஊடகம் ஒன்று வெளியிட்டிருந்தது.

அனைத்துலக சமூகம் இது தொடர்பில் அதிக கவனம் எடுக்காதது வேதனையானது.

காங்கிரஸ் தலைமையிலான இந்திய மத்திய அரசு தமிழ் மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்துள்ளதும் அதனை நடைமுறைப் படுத்தி வருவதும் ஒரு புறம் இருக்க பேச்சுக்களின் மூலம் தமிழ் மக்களின் உரிமைகளை பெற்றுக்கொள்ள முடியும் என அறை கூவல் விடுத்து வந்த அனைத்துலகத்தின் முக்கிய நாடுகளும் இன்று தமிழ் மக்கள் பாரிய ஒரு நெருக்கடிக்குள் நிற்கையில் மௌனமாகி போனது கவலையானது. அனைத்துலகத்தின் ஊடகங்களும் இந்த மனித அவலங்களை வெளிக்கொண்டு வருவதில் பாரபட்சம் காட்டி வருகின்றன. இவை தவிர தமிழ் மக்களின் போராட்டம் படைத்துறை ரீதியாக நசுக்கப்பட்டால் இலங்கையில் கால்பதிப்பது யார் என்ற போட்டிகள் அனைத்துலகின் வல்லரசு நாடுகளிடம் ஏற்பட்டுள்ளதை தற்போது உணர முடிகின்றது. இலங்கைக்கு வந்து செல்லும் அதிகளவான படை அதிகாரிகளினதும் ஆலோசகர்களினதும் வரவுகளில் இருந்து இதனை அறிந்து கொள்ளலாம்.

இந்தியாவும் தனது உளவு விமானங்களை இலங்கையின் வான்பரப்பில் நடவடிக்கையில் ஈடுபடுத்தி வருகின்றது கடந்த செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு வான்பரப்பில் இந்திய உளவு அமைப்பான றோவின் விமானம் ஒன்று வட்டமிட்டு சென்றுள்ளதாக கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்துள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 8.30 மணியளவில் பாக்கு நீரிணைக்கு மேலாக வந்த விமானம் முல்லைத்தீவு வான்பரப்பில் நுழைந்து பின்னர் மீண்டும் அதே பாதையினால் திரும்பி சென்றுள்ளது. எனவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் விமானம் எதுவும் பறக்க வில்லையென கடந்த வியாழக்கிழமை விமானப்படைப் பேச்சாளர் ஜனக நாணயக்கார அதனை மறுத்திருந்தார். கடந்த ஜனவரி 3ஆம் நாளும் விமானம் மூலம் வன்னிப் பகுதியை இந்திய உளவு அமைப்பு கண்காணித்ததாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இறுதித் தாக்குதல்களுக்கு இரு தரப்புகளும் தம்மை தயார்ப்படுத்தி வரும் போது,வன்னியில் வாழும் மக்கள் குறுகிய நிலப்பரப்பில் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களினால் கடுமையான பாதிப்புக்களைசந்தித்து வருகின்றனர்.

மேலும் கடந்த வியாழக்கிழமை விசுவமடுவை அண்டிய நெத்தலியாறு மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளை நோக்கி முன்நகர்ந்த இராணுவ அணிகளின் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களிலும் படைத்தரப்பு அதிக இழப்புக்களை சந்தித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இறுதித்தாக்குதல்களுக்கு இரு தரப்புகளும் தம்மைத் தயார்ப்படுத்தி வரும் போதும் வன்னியில் வாழும் மக்கள் குறுகிய நிலப்பரப்பில் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களினால் கடுமையான பாதிப்புக்களை சந்தித்து வருகின்றனர். அங்கு நடைபெற்ற தொடர் வான் மற்றும் எறிகணைத் தாக்குதல்களினால் கடந்த வியழக்கிழமை வரை ஏறத்தாழ 146க்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டு 500க்கு மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளதாக வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் மூன்று தினங்களில் 88க்கு மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டதாகவும் 200 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது வியழக்கிழமை வள்ளி புனம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் இயங்கி வந்த முல்லைத்தீவு வைத்தியசாலையும் எறிகணைத் தாக்குதலுக்கு இலக்காகி உள்ளது. இதன் போது 22 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.



வன்னியில் மோதல் இடம்பெறும் பகுதியில் சிக்கியுள்ள பொதுமக்கள் தொடர்பாக ஐ.நா வின் இலங்கைக்கான வதிவிட இணைப்பாளர் நீல் புஹ்ற் வன்னிப்பிராந்திய பாதுகாப்புப்படைப்பிரிவுகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் டயஸூடன் உரையாடுகிறார்.

மருத்துவ வசதிகள் மற்றும் அடிப்பீடை வசதிகள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் வாழ்ந்துவரும் மக்களை குண்டு வீச்சுக்கள் கடுமையாக பாதித்து வருகின்றன. இந்த வருடத்தின் ஆரம்பத்தில் இருந்து இன்று வரையிலும் அங்கு நடைபெற்ற தாக்குதல்களில் 146ற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டும் 500ற்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளனர். அவர்களில் பலர் சிறுவர்களும் குழந்தைகளும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பெருமளவில் காயமடையும் மக்களை பராமரிக்கும் வைத்தியசாலை வசதிகள் அங்கு இல்லை இந்த நிலையில் காய மடையும் மக்கள் வீடுகளில் தற்காலிகமாக அமைக்கபட்ட படுக்கைகளில் வைத்து பராமரிக்கப்பட்டுவருவதும் வேதனையானது இந்தத் தாக்குதல்களை தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன் உலகின் ஒட்டுமொத்த தமிழ் இனமும் ஒன்றுபட்டு வருகையில் அதிக தமிழ் மக்களை கொண்ட தமிழகத்தின் பங்களிப்புகள் காத்திரமான செயல்திறனை ஆற்ற முடியும். உலகெங்கும் தமிழ் மக்கள் பல போராட்டங்களை நடத்திவரும் போதும்

இதேவேளை போர் உக்கிரமடைந்த காலப்பகுதியான 2006ஆம் ஆண்டில் இருந்து தற்போது வரையிலும் இலங்கையில் 9 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டு 27 பேர் தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளனர். என அரச தரப்பின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். இந் நிலையில் பெருமளவான ஊடகவியலாளர்கள் இலங்கையை விட்டு வெளியேறியுள்ளனர். எஞ்சியுள்ள ஊடகவியலாளர்களும் போர் தொடர்பாக அரசாங்கம் வெளியிடும் தக

**வேல்ஸிலிருந்து அருஷ்**

வல்களை எழுதிவிட்டு மௌனமாக இருந்து விடுகின்றனர். எனவே வன்னிப் போர் நடவடிக்கையில் ஒரு தரப்பின் தகவல்கள் தான் அனைத்துலகத்தின் கவனத்துக்கு அதிகம் செல்கின்றன.

இந்த தகவல்களை நம்பியே அனைத்துலகத்தின் கணிப்பீடுகளும் செயற்பாடுகளும் அமைந்துள்ளன.

# ஆஸி. ஓபன் டென்னிஸில் நான்காவது சுற்றில் நடால்

## செரினா வில்லியம்ஸின் வெற்றிநடை தொடர்கிறது

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியன் ஓபன் டென்னிஸ் தொடரின் நான்காவது சுற்றுக்கு உலகின் நம்பர்-1 வீரரான ரபேல் நடால் முன்னேறினார். பெண்கள் பிரிவில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் வெற்றிநடை தொடருகிறது.

கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர்களில் ஒன்றான அவுஸ்திரேலியன் ஓபன் டென்னிஸ் தொடர் மெல்போர்னில் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த ஆண்கள் மூன்றாவது சுற்றுப்போட்டியில் ஸ்பெயினின் நடால்,ஜேர்மனியின் டாமி ஹாசை சந்தித்தார். அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய நடால் 6:4,6:2, 6:2 என்ற நேர் செட்டில் எளிதாக வென்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

**ஆண்டி முரே முன்னேற்றம்**

மற்றொரு போட்டியில் இங்கிலாந்தின் ஆண்டி முரே ஆஸ்திரியாவின் ஜர்கன் மெல்சரை 7:5,6:0,6:3 என்ற நேர் செட்டில் வீழ்த்தினார். இதேபிரிவில் அமெரிக்காவின் ஜேம்ஸ் பிளேக்,ரஷ்யாவின் இகோர் ஆண்டி ரீவை 6:3, 6:2,3:6,6:1 என்ற செட் கணக்கில் வீழ்த்தி 4 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

**செரினா அபாரம்**

பெண்கள் ஒற்றையர் 3ஆவது சுற்று ஆட்டத்தில் உலகின் இரண்டாம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ்,சீனாவின் சுயாய் பெங்கை சந்தித்தார். இதில் செரினா 6:2,6:4 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் பெலாரசின் விக்டோரியா அசரெங்கா,பிரான்சின் அமெலி மவுரஸ்மோவை 6:4,6:2 என்ற நேர் செட்டில் வீழ்த்தி 4ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

ரஷ்யாவின் எலினா டெமன்டிவா, அவுஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டாசுரை 7:6,6:4 என்ற நேர் செட்டில் வீழ்த்தி நான்காவது சுற்றுக்கு தகுதி பெற்றார். இதேபிரிவில் சுலோவேகியாவின் டொமனிகா சிபுல்கோவா, பிரான்சின் விர்ஜினி ரசனோவை 7:5,7:5 என்ற நேர் செட்டில் வீழ்த்தி நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

# ஒருநாள் தொடரையும் ஆஸி.அணி இழக்குமா?

## இன்று நான்காவது போட்டி

(அடிலெய்ட்)

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி அவுஸ்ரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகின்றது.டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்கா 2:1 என்ற கணக்கில் கைப்பற்றி புதிய வரலாறு படைத்தது.5 ஒருநாள் போட்டித் தொடரில் தென்னாபிரிக்கா 2 மற்றும் 3 ஆவது ஆட்டங்களிலும் அவுஸ்ரேலியா அணி முதலாவது ஆட்டத்திலும் வெற்றி பெற்றது. இதன் மூலம் தொடரில் தென்னாபிரிக்கா 2:1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இரு அணிகள் மோதும் 4 ஆவது ஒருநாள் போட்டி அடிலெய்ட்டில் இன்று பகல்-இரவு ஆட்டமாக நடக்கிறது.இந்தப்போட்டியில் தோல்வியடைந்தால் அவுஸ்ரேலியா தொடரை இழந்து விடும். இதனால் வெற்றி பெற அந்த அணி கடுமையாகப் போராடும்.

மோர்கலின் அதிரடி ஆட்டம் தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்கு முக்கிய பங்காக இருக்கின்றது.கலிஸ், மக்கன்சி, டுமினி, கிப்ஸ் ஆகியோர் அந்த அணியின் முதுகெலும்பாக உள்ளனர்.பந்து வீச்சில் ஸ்ரையன், நிற்னி ஆகியோர் நல்ல நிலையில் உள்ளனர்.

அவுஸ்ரேலிய அணியை பொறுத்த வரை மார்ஷ், வோர்னர், ஹசி ஆகியோரும் பந்து வீச்சில் தைய்ட்,மைக்கெல் ஜோன்சன் ஆகியோரும் நல்ல நிலையில் உள்ளனர். இரு அணி களும் சவாலாக ஆடுவதால் இன்றைய ஆட்டம் விறுவிறுப்பாக அமையும் என எதிர்பார்க் கப்படுகின்றது.

# உலக கிண்ண தொடருக்கு பின் ஓய்வு-முரளி

(கொழும்பு)

500 விக்கெட் எடுத்தது மகிழ்ச்சிதான். ஆனால் என்னை பொறுத்தவரை தனிப்பட்ட சாதனையை விட அணியின் வெற்றிதான் முக்கியமானது..

எந்த இலக்கும் இலட்சியமும் கிடையாதென இலங்கை அணியின் சுழல்பந்துவீச்சாளர் முரளிதரன் தெரிவித்துள்ளார்.500 விக்கெட் கைப்பற்றியது குறித்து முரளிதரன் கூறியதாவது;

கடந்த முறை இந்திய அணியிடம் ஒருநாள் தொடரை இழந்தோம். தற்போது அதற்கு பழி வாங்குவோம். இந்திய அணி உலகின் தலை சிறந்த அணிகளில் ஒன்றாகும். இந்திய துடுப்பாட்ட வீரர்களின் சவாலை சந்திக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

2011ஆம் ஆண்டு உலக கோப்பைக்கு பின்னர் ஓய்வு பெற முடிபு செய்துள்ளேன் இவ்வாறு முரளிதரன் கூறியுள்ளார்.

(5)

# சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றி

(யாழ்ப்பாணம்)

லவதீசனின் சிறப்பான சகலதுறை ஆட்டத்தின் மூலம் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதுப் பிரிவினருக்கான சிநேகபூர்வ கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது.

இதில் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி அணிகளுக்கிடையிலான இருநாள் இன்னிங்ஸ் போட்டி கடந்த 20,21ஆம் திகதிகளில் யாழ்.சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணித்தலைவர் எம்.ஏ.நிலோஷன் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக்கல்லூரி அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் 29.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 43 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது.

இதில் ரி.துவாரகன் அதிக பட்சமாக 20 ஓட்டங்களை எடுத்தார். பந்துவீச்சில் ரி.லவதீசன் 4 விக்கெட்டுக்களையும் எம்.டி.சயிந்திரன் 2 விக்கெட்டுக்களையும் எஸ்.மிலான்டோ,எம்.வி.ஹமில்ரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி ஏ.எம்.மனோஜ்,பி.நவதீபன் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 66.3 ஓவர்களில் 150 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் ஏ.எம்.மனோஜ் 38 ஓட்டங்களையும் பி.நவதீபன் 29 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் என்.கார்த்திக் 3 விக்கெட்டுக்களையும் எஸ்.தீபன்,ஆர்.பவித்திரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் எஸ்.நிரோஜன்,கே.நிரோஜன்,கே.ஜனுதாஸ் ஆகியோர் தலா ஒருவிக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 107 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையிலிருந்த கொக்குவில் இந்துக்கல்லூரி அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி 88.5 ஓவர்களில் 123 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் ஆர்.பவித்திரன் 27 ஓட்டங்களையும் பி.தீபன் 23 ஓட்டங்களையும் என்.கார்த்திக் ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் எம்.ஏ.நிலோசன், எஸ்.மிலன்டோ ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களையும் எம்.வி.ஹமில்ரன் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இந் நிலையில் 17 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 5.2 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 17 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் ஏ.ம்.மனோஜ் 8 ஓட்டங்களையும் எம்.ஏ.நிலோசன் 5 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் எஸ்.நிரேசன் ஒருவிக்கெட்டை வீழ்த்தினார். இதேவேளை யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி, சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணிகள் மோதும் இருநாள் இன்னிங்ஸ் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 30,31ஆம் திகதிகளில் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகிறது.

# ஜோயல் செகான் அரைச்சதம்; யாழ்ப்பாணக்கல்லூரி வெற்றி

(வட்டுக்கோட்டை)

ஜோயல் செகானின் சிறப்பான அரைச்சதம்,கஜநாதனின் துல்லியமான பந்துவீச்சின் மூலமும் யாழ்ப்பாணக்கல்லூரி அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.



ஜோயல் செகான்

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான 19வயதுப் பிரிவினருக்கான சிநேகபூர்வ கிரிக்கெட் தொடரில் கடந்த 16,17ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 143 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் கஜதீபன்,கோகுலன் ஆகியோர் தலா 29 ஓட்டங்களையும் நிக்ஷன் 26 ஓட்டங்களையும் கோகுலதாஸ் 16 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் வி.கஜநாதன்,அணித்தலைவர் எஸ்.நிரோஷன் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களையும் வி.ஜோயல் செகான் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி ஜோயல் செகானின் சிறப்பான அரைச்சதத்தின் மூலம் 176 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

யாழ்ப்பாணக்கல்லூரி அணி, ஒரு கட்டத்தில் 36 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 5 விக்கெட்டுக்களையிழந்திருந்த நிலையில் 6 ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ஜோயல் செகான்-மதுஷன் ஜோடியின் 124 ஓட்டங்கள் என்ற இணைப்பாட்டத்தின் மூலம் வலுவான நிலையை அடைந்தது.

இதில் வி.ஜோயல் செகான் (10 பவுண்டரிகள்,ஒரு சிக்ஸர் அடங்கலாக) 79 ஓட்டங்ளையும் எம்.மதுஷன் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 37 ஓட்டங்களையும் கே.பிரசோத்மன் 15 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் கஜதீபன் 5 விக்கெட்டுக்களையும் விஷ்ணுகாந் 3 விக்கெட்டுக்களையும் கோகுலன்,பார்த்தீபன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு முதலாவது இன்னிங்ஸில் 33 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையிலிருந்த தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுக்களையுமிழந்து 84 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது.

இதில் பார்த்தீபன் 18 ஓட்டங்களையும் காந்தசீலன் 16,நிக்ஷன் 15 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் வி.கஜநாதன் 7 விக்கெட்டுக்களையும் பிரியலக்ஷன், கோமலதரன், ஜோயல்செகான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து 52 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி அணி 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 52 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் அணித்தலைவர் எஸ்.நிரோசன் 20 ஓட்டங்களையும் பிரசோத்மன் 13 ஓட்டங்களையும் பிரசாத் ஆட்டமிழக்காமல் 2 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் பார்த்தீபன்,விஷ்ணுகாந்த், டிலூக்ஷன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

# பயங்கரவாதத்துக்கு எதிரான...

நகருக்குள் நேற்று பிரவேசித்ததை அடுத்து அதனை நாட்டு மக்களுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் வகையில் தேசிய தொலைக்காட்சிகளூடாக நாட்டு மக்களுக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

முப்படைகளின் தளபதியும் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவம், ஆலோசனைகள் மற்றும் வழிநடத்தல்கள், பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் தீர்க்கதரிசனமான செயற்பாடுகள் காரணமாக படையினருக்கு இவ்வாறான வெற்றிகளை பெற்றுக்கொள்ள முடிந்தது.

கடந்த ஒரு வருடங்களாக மேற்கொண்ட தொடர்ச்சியான முயற்சிகள் காரணமாக முல்லைத்தீவு நகருக்குள் படையினர் பிரவேசித்துள்ளனர்.

இது படையினருக்கு கிடைத்த வெற்றி மட்டுமல்லாது நாட்டிற்கு கிடைத்த வெற்றியாகும். இந்த வெற்றியின் மூலமாக பயங்கரவாதத்திற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் 95 வீதம் நிறைவடைந்துள்ளது மிகுதியையும் மிக விரைவில் வென்றெடுப்போம்.

பயங்கரவாதத்திற்கு எதிராக படையினரால் முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளுக்கு நாட்டு மக்கள் பூரண ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளனர்.

அதே போல கடந்த ஒருவருட காலத்தில் பயங்கரவாதத்திற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட படை நடவடிக்கைகளின் போது உயிரிழந்த, அங்கவீனமுற்ற படையினர்களுக்கும் எமது கௌரவத்தை தெரிவிக்கின்றோம்.

படையினர் வெற்றி கொள்கின்றபோது மக்கள் வழங்கின்ற ஒத்துழைப்புக்கள் படையினரின் எதிர்கால வெற்றிக்கு வழிசமைக்கும் என்பதனால் படைவெற்றிகளை கடந்த காலத்தில் கொண்டாடியது போல முல்லைத்தீவு நகருக்குள் படையினர் பிரவேசித்துள்ளதையும் தேசிய கொடிகளை ஏற்றி ஒரு மாதத்திற்கு கொண்டாடவேண்டும்.

பயங்கரவாதத்திற்கு எதிரான படை நடவடிக்கைகளின்போது அரசாங்கம், மக்கள் ஒத்துழைப்பு வழங்கியதை போல படையில் 60 ஆயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர்கள் இணைத்துக்கொண்டமை படைநடவடிக்கைகளை இன்னமும் வலிமைப்படுத்தியது.

அதேபோல எதிர்காலத்திலும் இளைஞர்கள் படையில் இணைவதற்கு முன்வரவேண்டும். பயங்கர வாதத்திற்கு எதிராக, மிக அருகில் இருக்கின்ற வெற்றியை கட்டாயமாக வெற்றிகொள்வதற்கு இவை யாவுமே இன்றியமையாதது. (ச-5)

# அதி நவீன...

ஏதாவும் இவற்றை ஏற்றிய கப்பல் இலங்கை கடற்பரப்பில் தரித்து நிற்பதாகவும் தென்னாசியப் பிராந்திய தகவல் ஒன்று கூறுகிறது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பாகிஸ்தான் சென்ற நிலையில் மறுபுறம் சீன அரசிடமும் ஆயுத உதவிகள் கோரப்பட்டதாக உள்ளகத் தகவல் கள் தெரிவிக்கின்றன. (ச-5)

# இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சகலரினதும் ஒத்துழைப்பும் அவசியம்

## அகாஷி வலியுறுத்தல்

இலங்கையில் சமாதான முனைப்புகள் தோல்வியடைவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படாமையே காரணம் என இலங்கைக்கான ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான தனது விஜயத்தை நிறைவு செய்யும் தருணத்தில் ஜப்பானிய சமாதான தூதுவர் யசூசி அகாஷி நேற்று ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியுள்ளார்.

இந்த சந்திப்பின் போது ஊடகவியலாளர்களின் பல கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார். இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வுக்கு அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். தென்னிலங்கை கட்சிகள் மத்தியில் முரண்பாடுகள் இருப்பின் அதனை நாடாளுமன்றத்திற்குள்ளேயே தீர்த்துக் கொள்ள வேண்டும் வெளியில் சென்று அதனைத் தீர்த்துக்கொள்ள முயற்சிக்கக்கூடாது என்றும் யசூசி தெரிவித்தார்.

வன்னிப் பிராந்தியத்தில் இருந்து இடம் பெயர்ந்த நிலையில் வவுனியா வந்துள்ள மக்களுக்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள வசதிகள் மற்றும் நிவாரணங்கள் குறித்து யசூசி அகாஷி திருப்தி வெளியிட்டார்.

இந்தவிடயத்தில் அரசாங்கம் உச்ச அளவிலான உதவிகளை மேற்கொள்வதை அவதானிக்க கூடியதாக இருப்பதாகவும் அவர் நேற்றைய ஊடக சந்திப்பின் போது தெரிவித்தார்.

இதேவேளை 61 நாடுகள் மற்றும் 21 தொண்டு நிறுவனங்களுடன் இலங்கை அரசாங்கம் மாத்திரமே டோக்கியோவில் இடம்பெற்ற மாநாட்டில் கலந்து கொண்டது.

அந்த மாநாட்டில் தமிழீழ விடுதலை புலிகளும் கலந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு இருந்தது. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் அதனை நிராகரித்தனர்.

இது தொடர்பில் தாம் கவலையடைவதாக தெரிவித்தயசூசி அகாஷி காரணம் அந்த மாநாட்டின் போது 4.5 மில்லியன் டொலர் நிதிகள் கிடைத்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளும் இதில் கலந்து கொண்டிருந்தால் அது தமிழர்களுக்கு மாத்திரம் இன்றி ஏனைய இனங்களுக்கும் பெரிய வரப்பிரசாதமாக இருந்திருக்கும் என அவர் இதன் போது குறிப்பிட்டிருந்தார். (ச-5)

# 13 வருடங்களுக்...

முல்லைத்தீவு நகரத்தை இலங்கைப் படையினர் நேற்று தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்திருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இராணுவத்தின் 59-வது பிரிவின் ஒரு அணி நேற்று காலை முல்லைத்தீவு நகரத்தைக் கைப்பற்றி அங்கு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

1996ம் ஆண்டு முல்லைத்தீவு நகரில் அமைந்திருந்த இராணுவ முகாமைத் தாக்கி முல்லைத்தீவு நகரை புலிகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்த பின்னர் முதல் தடவையாக முல்லைத்தீவு நகரம் மீண்டும் படையினர் வசம் வந்திருப்பதாக மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை முல்லைத்தீவுக்கு வடக்காக தருமபுரம் பிரதேசத்தில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல்கள் நடைபெற்று வருவதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்மடு குளத்தின் அணைக்கட்டைக் குண்டு வைத்துத் தகர்த்த புலிகள், அணை உடைத்துப் பாய்ந்த நீரூடாகப் படகுகளில் வந்து தொடுத்த தாக்குதலை இராணுவத்தினரின் 574-வது பிரிவினர் முறியடித்திருப்பதாக அது குறிப்பிட்டுள்ளது.

இதில் புலிகளின் மூன்று படகுகள் உடைக்கப்பட்டு மேலும் இரண்டு சேதமாக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தை நோக்கி புலிகள் கடுமையான ஆட்டிலறி எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாகவும் இதனால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு படையினர் வழங்கிவந்த உதவிப் பணிகள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கல்மடுக்குள அணைக்கட்டுத் தகர்ப்பினால் ஏராளமான கால்நடைகள், விவசாயப் பயிர்கள், வீடுகள், கட்டடங்கள், சொத்துக்கள் உட்பட பொதுமக்களுக்கும் பாரிய சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ச-5)

# சிங்கள...

கடைசி யுத்தம் எனக் கூறி உதவிகள் செய்து வருகிறது. அதைத் தான் ராஜபக்ஷ அண்மையில் டில்லிக்கு வந்தபோது கூறியிருந்தார்.

இழந்த யாழ்ப்பாணத்தையும் மற்ற பகுதிகளையும் புலிகள் விரைவில் மீட்பார்கள். 50 ஆண்டுகால உரிமைப்போரை தமிழக மக்கள் ஆதரிக்க வேண்டும்.

இத்தகைய போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் மீது தமிழக அரசு அடக்குமுறையை பிரயோகித்தால் விபரீதம் ஏற்படும். இந்திய அரசின் துரோகத்திற்கு கருணாநிதி தான் பங்காளியாவார்.

கடந்த 4 மாதங்களாக இலங்கை பிரச்சினையில் உயிரை விடுவோம், ஆட்சியை இழப்போம், எம்.பி. பதவியை இராஜினாமாச் செய்வோம் என இரட்டை நாடகம் நடத்திடும் கருணாநிதி தற்போது பொதுக் குழு என கூறிவருகிறார்.

பெப்ரவரி 12இல் டில்லி பார்லி. கட்டடம் முன் நாங்கள் உண்ணாவிரதம் மேற்கொள்ள உள்ளோம். இதனை இருட்டடிப்பு செய்வதற்காகவே பொதுக் குழு என அறிவித்துள்ளார். இவ்வாறு வைகோ கூறினார். (ச-5)


New batches start on:- 14.02.2009

CAD & BS (காலம்:- 6 மாதம்)

Diploma in Computer Aided Drafting and Building Studies

கட்டடத்துறையில் உங்கள் திறனை வளர்த்துக் கொள்ளுங்கள்

கட்டடத் தொழில்நுட்பவியலாளர்கள், கட்டடத் தொழில்நுட்பமாணவர்கள் க.பொ.த (உ/த) கற்றோர் கவனத்திற்கு! உங்களுக்காகவே நவீன தொழில்நுட்ப யுக்திகளை உங்கள் துறையில் பிரயோகிக்கதக்க வகையில் வடிவமைக்கப்பட்ட விசேட கற்கைநெறி. இக்கற்கை நெறி இத்துறையில் நீங்கள் உயர்கல்வியை தொடரவோ அல்லது வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ளவோ ஓர் சிறந்த அத்திவாரமாகும்.



Course Contents :
1.Building Technology
2.Construction Materials
3.Building Services
4.Building Drawings
5.Quantity Surveying
6.Basic Theory of Structures
7.Computer Aided Drafting

CBM (காலம்:- 6 மாதம்)

Diploma in Contemporary Business Management

முகாமைத்துவத்துறையில் உங்கள் திறனை வளர்த்துக் கொள்ளுங்கள்.



இக்கற்கை நெறியானது முகாமைத்துவத் துறையில் பணிபுரிவோர் மற்றும் இத்துறையில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு நவீன முகாமைத்துவத்தின் எண்ணக்கருக்களையும், சமகால தகவல் தொழில்நுட்ப, தொழில்நுட்ப பிரயோகங்களையும் பயன்படுத்த தக்கவகையில் வடிவமைக்கப்பட்டதாகும். இக்கற்கை நெறி இத்துறையில் நீங்கள் உயர்கல்வியை தொடரவும், வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ளவும் ஓர் சிறந்த வாய்ப்பினை ஏற்படுத்தி தருகின்றது.

Course Contents :
1.Management & Organizational Behaviour
2.Human Resource Management
3.Marketing Management
4.Financial Management
5.Business Communication
6.ICT For Managers

IIS CITY CAMPUS
#200,Sivan Pannai Road,Jaffna.
Tel:021 222 8060 Fax:021 222 6933
Email:iiscc@sltnet.lk Web: www.iiscitycampus.com
(C-2072)



யாழ் குடாநாட்டில் எங்குமே கிடைக்கப்பெறாத விலையில்...!

| P4 COMPUTER MW PACKAGE - 1 | P4 COMPUTER MW PACKAGE - 2 | P4 COMPUTER MW PACKAGE - 3 |
| --- | --- | --- |
| Intel 1.8Ghz Processor | Intel 1.8Ghz Processor | Intel 2.2Ghz Dualcore Processor |
| Intel G31 Mother board | Intel G31 Mother board | Asus / Foxconn Motherboard |
| 160GB Sata Harddisk | 160GB Sata Harddisk | 160GB Sata Harddisk |
| 1GB DDR11 800Mhz Ram | 1GB DDR11 800Mhz Ram | 1GB DDR11 800Mhz Ram |
| Samsung Sata DVD Writer | Samsung Sata DVD Writer | Samsung Sata DVD Writer |
| 15" Viewsonic / LG Monitor | 16"(15.6") LCD Monitor | 16"(15.6") LCD Monitor |
| ATX Black Casing | ATX Black Casing | ATX Black Casing |
| Keyboard | Multimedia keyboard | Multimedia Keyboard |
| Optical Mouse | Optical Mouse | Optical Mouse |
| | 650A UPS | 650A UPS |
| Rs.37,000/= | Rs.43,500/= | Rs.48,000/= |

| P4 COMPUTER MW PACKAGE - 4 | P4 COMPUTER MW PACKAGE - 5 | P4 COMPUTER MW PACKAGE - 6 |
| --- | --- | --- |
| Intel 2.2Ghz Dualcore Processor | Intel 2.2Ghz Dualcore Processor | Intel 2.2Ghz Dualcore Processor |
| Intel DG31 Motherboard | Intel DG31 Motherboard | Intel DG31 Motherboard |
| 160GB Sata Harddisk | 250GB Sata Harddisk | 250GB Sata Harddisk |
| 2GB DDR11 800Mhz Ram | 2GB DDR11 800Mhz Ram | 4GB 2GB +2GB DDR11 800Mhz Ram |
| Sony Sata DVD Writer | Sony Sata DVD Writer | Asus Lightscribe DVD Writer |
| 17" LCD Monitor | 17" LCD Monitor | 19" LCD Multimedia Monitor |
| ATX Black Casing | ATX Black Casing | ATX Black Casing |
| Multimedia Keyboard | Multimedia Keyboard | Multimedia Keyboard |
| Optical Mouse | Optical Mouse | Optical Mouse |
| 650A UPS | 650A UPS | 650A UPS |
| Rs.56,500/= | Rs.57,500/= | Rs.64,000/= |

MUSIC WORLD & COMPUTERS
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. 021 222 6554
(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)

Note1 1-3 வருட உத்தரவாதம் வழங்கப்படும்
Note2 இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே



குறிப்பு:- நேற்றைய தினம் வெளியான விளம்பரம் தவறுதலாக வெளியாகியிருந்தது. அதற்காக வருந்துகிறோம்.
(-விளம்பர முகாமையாளர்)



இப்போது விற்பனையாகிறது...

பொது நிர்வாகமும் சூழலும்
Public Administration and Environment

பொதுநிர்வாக உதவியாளர் சேவையின் அதியுயர் வகுப்புக்கு தரமுயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சைவினாக்களும் வழிகாட்டலும்.

தொகுப்பு:- அ.உமாமகேஸ்வரன் (BBA.cons., SLAS)

விலை:- ரூபா 275/=

கிடைக்குமிடங்கள்:-
பூபாலசிங்கம் புத்தகசாலை,
அன்னை புத்தகசாலை,
சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை (நெல்லியடி).
(C-2073)



தொழிற் பயிற்சிகள்

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புப் பெறக்கூடிய முறையில் முழுநேர செய்முறைப் பயிற்சிகளுடன் பயிற்சியளிக்கப்படும்.

❖ Mobile Phone Repairing
Hard Ware — Hard Ware Repairing
Soft Ware — Phone Lock — காலம்:- 3 மாதங்கள்

❖ Diploma in Hard Ware Engineering — காலம்:- 3 மாதங்கள்

❖ ரேடியோ, ரெலிவிசன், வீடியோடெக் ரிப்பியறிங்
சகல இன ரேடியோக்கள், ரெலிவிசன், வீடியோ டெக், CD,Amp திருத்துதல் பயிற்சியளிக்கப்படும். — காலம்:- 9 மாதங்கள்

❖ ஏயர் கொண்டிசனிங்
சகல குளிர் சாதனப் பெட்டிகள், ஏயர்கொண்டிசன்கள் திருத்தும் முறைகள் பயிற்சியளிக்கப்படும். — காலம்:- 6 மாதங்கள்

❖ எலக்ரிக்கல் வயறிங், றீவைண்டிங், வீட்டு மின் வேலை, மோட்டார், Fan, Transformer வைண்டிங் செய்யப்படும் முறை பயிற்சியளிக்கப்படும். — காலம்:- 6 மாதங்கள்

ஆரம்பம் :- 30.01.2009 (வெள்ளி), 01.02.2009 (ஞாயிறு)

JAFFNA TECHNICAL INSTITUTE
இல., 45 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 6434, 0779254078, 0718561654
(C-2068)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.